



32ஆவது ஆண்டில்

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com






நதி: 32 | பாலம்: 02 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 15, 2022

# நேரில் கற்றலுக்காக மீண்டும் திறக்கப்படும் பாடசாலைகள்

ஒன்ராறியோ மாகாணப் பாடசாலைகள் மாணவர் நேரில் கல்வி கற்றலுக்காக 2022 ஜனவரி 17ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என ஒன்ராறியோ மாகாண அரசின் பிரதிநிதி ஊடகங்களுக்கு ஜனவரி 10ஆம் திகதி உறுதி செய்தார்.

ஒன்ராறியோ மாகாணப் பாடசாலைகள் டிசம்பர் மாத பண்டிகைக்கால விடுமுறைக்காக மூடப்படும்போது அவை மீண்டும் 2022 ஜனவரி 3ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஒன்ராறியோ மாகாணத்தில் கோவிட்-19 தொற்று நோய்ப் பரவல் அதிகரிப்பைத் தொடர்ந்து 2021 டிசம்பர் 30இல் மாகாண அமைச்சரவையில் பாடசாலைகள் திறக்கப்படுவதை ஜனவரி 5ஆம் திகதி வரை பிற்போடுவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது என ஒன்ராறியோ மாகாணத் தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் Kieran Moore ஊடகங்களுக்கு அறிவித்தார்.

பாடசாலைகளில் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கால அவகாசம் அளிக்கும் முகமாக பாடசாலை ஆரம்பிக்கும் நாளில் இவ்வாறு இரண்டு நாள் தாமதம் செய்யப்பட்டதாக அப்போது அவர் கூறினார்.

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்க உயர்தர மூன்று அடுக்கு துணி முகக்கவசங்கள் (High Quality Three Ply cloth Masks) மேலதிகமாக விநியோகிக்கப்பட உள்ளன. அத்துடன் பாடசாலைப் பணியாளர்களுக்கும், உரிமம் பெற்ற குழந்தைப் பராமரிப்பாளர்களுக்கும் பாவிப்பதற்காக அறுவை சிகிச்சை முகக்கவசங்களுக்குப் (Surgical Masks) பதிலாக N95 முகக்கவசங்கள் வழங்கப்பட உள்ளன என்றார்.

N95 முகக்கவசங்கள் ஒருவருவடைய முக அமைப்பிற்குச் சரியாகப் பொருத்தப்பட்டால் அவை 0.3 மைக்ரானிற்கு மேற்பட்ட துணிக்கைகளில் 95%ஆனவற்றை அதனூடாக செல்லவிடாது தடை செய்யக்கூடியன. ஒரு மைக்ரான் எனப்படுவது 0.001 மில்லி மீற்றர் ஆகும்.

இந்த முகக்கவசங்கள் எண்ணெய் பாவிக்கும் இடங்களில் பாவிக்கப்படக் கூடாது என்பதைக் குறிக்க N (Non-Oil) குறியீடு இடப்பட்டுள்ளது. இவ்வாறான முகக்கவசங்கள் ஒருவரது முக அமைப்புக்கு ஏற்ப சரியாகப் பொருத்தப்பட வேண்டும் என்பதால், ஒன்ராறியோ அரசு வெவ்வேறு அளவு N95 முகக்கவசங்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புகிறது. அங்கு அவர்கள் தமது முக அமைப்பிற்கு ஏற்ப அளவான N95 முகக்கவசங்களை அணிந்து பார்த்து (Fit Test) எடுக்க வேண்டும்.


Back to Class

Ontario Education Minister Stephen Lecce

இவற்றுடன் மேலதிகமாக 3,000 HEPA தடுப்பு உபகரணங்கள் (Filter Units) பாடசாலைகளுக்கு அனுப்பப்பட உள்ளன. பாடசாலைகளில் ஏற்கனவே 70,000 HEPA தடுப்பு உபகரணங்கள் உண்டு. HEPA தடுப்பு உபகரணம் 0.3 மைக்ரானிற்கு மேற்பட்ட துணிக்கைகளில் 99.97% ஆனவற்றை அதனூடாக செல்லவிடாது வடிகட்டி காற்றைச் சுத்தப்படுத்திச் செல்லவிடும்.

மேலும், மாணவர்கள் ஜனவரியில் பாடசாலைக்குச் செல்லும்போது அங்கு குறைந்த தொடுகை உள்ள உள்ளக விளையாட்டுக்கள் (Low Contact Indoor Sports) மற்றும் பாதுகாப்பான பாடநெறி தவிர்த்த மேலதிக செய்கை முறைகள் (Safe Extra-Curricular Activities) மட்டுமே அனுமதிக்கப்படும் என ஒன்ராறியோ அரசு அறிவித்துள்ளது.

தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் கீரன் மூர் கோவிட்-19 தொற்றுநோய்த் தனிமைப்படுத்தப்படும் கால அளவையும் தடுப்பூசி (இரண்டு ஊசிகள்) போட்டவர்களுக்கு 10 நாட்களில் இருந்து 5 நாட்களாகக் குறைத்தார். அவர் ஊடகங்களுக்கு இது குறித்து தெரிவிக்கையில், "பொதுவாக ஆரோக்கியமானவர்களுக்கு கோவிட்-19 தொற்றுநோய் வந்தால் அவர்களுக்கு நோய் அறிகுறிகள் ஏற்பட இரண்டு நாட்களுக்கு முன்பிருந்து நோய் அறிகுறிகள் ஏற்பட்ட பிறகு மூன்று நாட்கள் வரையுமான காலப்பகுதியில் மற்றவர்களுக்கு இத்தொற்று நோயைப் பரப்பக் கூடியவர்களாக இருப்பார்கள்" என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நோய் அறிகுறிகள் ஏற்பட்டு ஐந்து நாட்கள் தனிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இருப்பவர் இறுதி 24 மணித்தியாலங்களில் அவர்களுக்கு நோய் அறிகுறிகள் தணிந்திருந்தால் அவர்கள் தமது தனிமைப்படுத்துதலை ஐந்து நாட்களில் நிறைவு செய்யலாம். அவர்களுடன் சேர்ந்து அவருடன் ஒன்றாக ஒரே வீட்டில் வாழ்பவர்களும், இந்தக்காலப்பகுதியில் தம்மைத் தனிமைப்படுத்த வேண்டும். தடுப்பூசி போடாதவர் தொடர்ந்தும் 10 நாட்கள் தனிமைப்படுத்துதலைச் செய்ய வேண்டும்" என்றார்.

ஒன்ராறியோ மாகாணத்திற்கான கோவிட்-19 PCR பரிசோதனை நடைமுறைப்படுத்தும் முறையையும், மாகாண அரசு டிசம்பர் 31ஆம் இருந்து மாற்றியமைத்தது.

கோவிட்-19 PCR பரிசோதனை கோவிட்-19 நோயால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், வயது முதிர்ந்தோர், வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இவ்வாறானோரைப் பராமரிப்பவர்களுக்கு மட்டுமே இனிமேல் செய்யப்படும்.

பொதுமக்களுக்கோ மற்றும் கோவிட்-19 விரைவு பரிசோதனை (Rapid Antigen Tests) மூலம் கோவிட்-19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டவர்களுக்கோ PCR பரிசோதனை செய்யப்பட மாட்டாது.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)
















EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5

Thas Thirunavukkarasu Dip-in- Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com



Builders' Approved VIP/Platinum Agent

VIP Sale Now On

5% Down

West Peak Condos
From $528,000 Guelph

Joshua Creek Detached
Oakville, From $1,199,900

Tricycle Condos
Scarborough, Move in 2023

Connectt Condos 2
From $549,000 Milton

Hewitt's Gate Towns
Barrie, From $555,900

Stockyards District
Toronto, Move in Late 2022

Four Me Condos
From $598,000 Scarborough

Rosepark Towns
Vaughan, From $1,355,900

Selling?
Call for FREE Report
(Upto $5000 Value)

The Ambrose Condos
From $470,900 Brantford

High Park Towns
Aurora, From Mid $700's

Buying?
Excellent Mortgage
Approval Network

Rossmont Green
From $499,000 Whitby

Swan Lake Towns & Semi
Richmond Hill, From $1,479,900

இனிய தைப்பொங்கல் புதுவருட நல்வாழ்த்துகள்.

# நேரில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பொதுமக்கள் தங்களுக்கு கோவிட்-19 தொற்றுக்கான நோய் அறிகுறிகள் ஏற்பட்டால் அவர்களுக்கு அவை தீவிர மான பாதிப்பை ஏற்படுத்தாதவிடத்து தமக்கு கோவிட்-19 தொற்று ஏற்பட்டதாக கருதி அரசின் புதிய தனிமைப்படுத்தும் நடைமுறைகளைக் கைக்கொள்ளுமாறு ஒன்ராறியோ மாகாண அரசு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டது.

கோவிட்-19 தொற்றுநோயின் ஓமிக்ரான் திரிபு தீவிரமாகப் பரவத் தொடங்கியதைத் தொடர்ந்து, மாகாண அரசு 2022 ஜனவரி 3ஆம் திகதி மாகாணம் தழுவிய கட்டுப் பாடுகளை அறிவித்தது. அரசு மாகாணம் முழுவதும் "மாகாணம் மீண்டும் திறக்கும் திட்டத்தின் மாற்றியமைக்கப்பட்ட நிலை 2" இற்குத் திரும்புவதாக அறிவித்தது.

இதன்படி ஜனவரி 5ஆம் திகதி நேரில் கற்றலுக்காகத் திறக்கப்பட இருந்த பாட சாலைகள் ஜனவரி 17ஆம் திகதிவரை நேரில் கற்றலுக்காகப் பிற்போடப்பட்டது. ஆனால், ஜனவரி 5ஆம் திகதியில் இருந்தே பாடசாலைகள் தொலைநிலைக் கற்றலுக்காக (Remote Learning) திறக்கப் படும் என மாகாண அரசு அறிவித்தது. அதன்படி ஒன்றாரியோ மாகாணத்தில் பாட சாலைகள் ஜனவரி 5ஆம் திகதி தொலை நிலைக் கற்றலுக்காகத் திறக்கப்பட்டன. மாணவர்கள் ஜனவரி 5ஆம் திகதியில் இருந்து இணையவழி மூலம் வீட்டில் இருந்தவாறே பாடங்களைக் கற்று வரு கின்றனர். ஜனவரி 10ஆம் திகதி ஒன்ரா றியோ மாகாண அரசு பாடசாலைகள் நேரில் கற்றலுக்காக ஜனவரி 17ஆம் திகதியில் இருந்து திறக்கப்பட உள்ளன என்று உறுதி செய்தது.







பாடசாலைக் கட்டிடங்கள் குழந்தைப் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும், தொலை நிலைக் கல்வி கற்க முடியாத சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர் களுக்கு நேரில் அறிவுரை வழங்குவதற்கு மாக ஜனவரி 5ஆம் திகதியில் இருந்தே திறக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

ஜனவரி 3ஆம் திகதி பாடசாலைகளை நேரில் கல்வி கற்பிப்பதற்காக ஜனவரி 17ஆம் திகதி வரை பிற்போடும் காரணத்தை ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கும்போது ஒன்ராறியோ முதல்வர் Doug Ford பாடசாலைகளை நேரில் கல்வி கற்பிப்பதற்காக ஜனவரி 5ஆம் திகதி திறந்தால் மாகாண அரசால் பாடசாலை களில் நேரில் கல்வி கற்க போதிய அளவு ஆசிரியர்கள் வருவார்களென உறுதிப் படுத்த முடியாது இருப்பதே முக்கிய காரணம் என்றார். பெரும்பான்மையான ஆசிரியர்கள் கோவிட்-19 தொற்றுநோயின் ஓமிக்ரான் திரிபால் பாதிக்கப் பட்டுள்ளார்கள். அதற்காகவே பாடசாலை களை நேரில் கற்றலுக்குத் திறக்காமல் தொலைநிலைக் கற்றலுக்கு ஜனவரி 5ஆம் திகதி திறப்பதாகக் கூறினார்.

பாடசாலைகள் நேரில் கற்றலுக்காக ஜனவரி 17ஆம் திகதி திறக்கப்படும் என அரசு ஜனவரி 3ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பை ஜனவரி 10ஆம் திகதி மாகாண அரசு உறுதி செய்தது. இதைத் தொடர்ந்து ஒன்ராறியோ மாகாணத்தின் இரண்டு மிகப்பெரிய ஆசிரியர் சங்கங் களின் தலைவர்களும், மாகாண அரசு ஜனவரி 17இல் பாடசாலைகளை நேரில் கற்பதற்காகத் திறக்கப்பட உள்ளது பற்றி தங்களுடன் முன்கூட்டியே ஆலோசனை நடத்தவில்லை என ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

ஒன்ராறியோ ஆரம்பப்பாடசாலை ஆசிரியர் களின் தொழிற்சங்கத் (ETFO) தலைவர் Karen Brown, CBC ஊடகத்திற்குத் தெரிவிக்கையில், "நாங்கள் சமூக ஊடகங்கள் மூலம் தான் ஜனவரி 17இல் பாடசாலைகள் திறக்கப்பட உள்ளதை அறிந்தோம். எங்களுக்கு மரியாதை அளித்து இச்செய்தியை எமக்கு அரசு அறிவிக்கவில்லை. இது அரசு கல்விப் பணியாளர்களை மதிக்கவில்லை என் பதைக் காட்டுகிறது. இப்படியான ஒரு முக்கியமான முடிவை அரசு எங்களுக்கு முதலில் நேரடியாகத் தெரிவித்திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்" என்றார்.

ஒன்ராறியோவின் இடைநிலைப்பாடசாலை ஆசிரியர்களின் தொழிற்சங்கத் (OSSTF) தலைவர் Karen Littlewood, CBC ஊடகத்திற்குத் தெரிவிக்கையில், "நாங்கள் இணையத்தளம் மூலம்தான் ஜனவரி 17இல் பாடசாலைகள் திறக்கப்பட உள் ளதை அறிந்தோம். மாகாண அரசு என்ன காரணத்தைக் கொண்டு பாடசாலைகளைத் திறக்க தற்போது முடிவு செய்தது எனத் தெரியவில்லை. கடந்த கிழமையை விட பாடசாலைகள் அடுத்த கிழமை எவ்வாறு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 599

## புதுவருட ஆதன மாற்றம்




2021 ஆதன வியாபாரத்தில் ஒரு சாதனை ஆண்டாகும். 2022 எவ்வாறாக இருக்க இருக்கலாமென வெவ்வேறு நிறுவனங்கள் தமது ஆய்வுகளுடன் எதிர்வு கூறல்களையும் தெரியப்படுத்தி வருகின்றன.

எவ்வாறான எதிர்வு கூறல்கள் வெளி வந்தாலும் 2022 இன் முதல் இரு வாரங்களிலும் ஆதன வியாபாரம் மிகவும் ஆரோக்கியமானதாகவே காணப்பட்டது. இது இந்த வருடம் ஆதன வியாபாரத்தில் மேலும் அதிகரிப்பு ஏற்படலாம் போன்ற எண்ணத்தை உருவாக்குகிறது.

இதற்கு பின்வரும் ஐந்து (5) காரணங்களை முன்வைக்கலாம்.

**1. மிகக் குறைந்த எண்ணிகையான ஆதனங்கள் சந்தைப்படுத்தப்படுகின்றது.**

2021 ஆம் ஆண்டில் போதியளவு ஆதனங்கள் சந்தைப் படுத்தப்படவில்லை. தாம் வசிக்கும் ஆதனத்தை விற்ற பின்னர் இன்னுமொரு ஆதனத்தை வாங்க முடியாது என்ற காரணத்தினால் பலரும் தமது ஆதனத்தை விற்கவில்லை. இந்தப் பற்றாக்குறை 2020 இல் தொடங்கி 2021



இலும் காணப்பட்டது. இந்த நிலைமை 2022 ஆம் ஆண்டிலும் தொடரலாம்.

**2. குறைந்த வட்டி வீதம்**

கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை 2022-ல் அதிகரிக்க இருப்பதாக ஏற்கனவே பல தடவைகள் கூறி வந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இறுதியாக மத்திய வங்கி வட்டி வீதத்தை அதிகரித்து இருந்தது.

2018ல் மட்டும் மூன்று தடவைகள் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டதால் ஆதன வியாபாரம் மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 இல் ஆதன விலையில் 4.9% இறக்கமும் ஆதன வியாபாரத்தில் 20% இறக்கமும் காணப்பட்ட்து.

| DECEMBER 2021 HOUSING MARKET BY REGION | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price: | *$1,023,029* | *$1,425,366* | *$1,033,032* | *$1,189,424* | *$1,343,098* |
| Total # New Listings | 1,963 | 916 | 565 | 1,119 | 438 |
| Total # Sales | 2,395 | 1,051 | 671 | 1,236 | 490 |
| Avg. Listing Days On Market (LDOM) | 19 | 14 | 9 | 10 | 11 |
| YTD Increase | *7%* | *21%* | *31%* | *20%* | *22%* |
| **HOUSE TYPES AND AVERAGE SALES PRICE** | | | | | |
| Detached | $1,698,178 | $1,816,614 | $1,178,857 | $1,601,465 | $1,810,446 |
| Semi-Detached | $1,342,429 | $1,248,195 | $891,111 | $1,123,463 | $1,180,807 |
| Townhouse | $1,252,131 | $1,282,933 | $949,882 | $1,035,464 | $1,128,518 |
| Condo Apt | $730,792 | $703,323 | $560,272 | $646,533 | $699,100 |

**Prepared By: Sivage Sivagumaran REALTOR® CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS |Source: TRREB Data As of, Jan/09/2022**

2018 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்ட வட்டி வீதம் 2019 இலும் மாறாமல் இருந்தது. ஆனால் 2020இல் கோவிட் -19 இன் காரணமாக வட்டி வீதம் இறக்கப்பட்டது. 2021 இல் வட்டிவீதத்தில் மாற்றம் ஏற்படவில்லை.

2022-ல் வட்டி வீதம் மூன்று தடவைகள் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படு கிறது. ஓமிக்ரோன் வைரஸ் பொருளா தார நிலைமையை மாற்றி அமைத்து விட்டது. இதன் பாதிப்பைப் பொறுத்தே மத்திய வங்கி முடிவை எடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

**3. ஆதன விலை அதிகரிக்கும்**

குறைந்த வட்டி வீதம், மிகக் குறைந்த ஆதாரங்கள் சந்தைப்படுத்தல்,கோவிட்-19 இனால் ஏற்பட்ட முடக்கம், அரசின் உதவிகள் ஆகியன ஆதன விலையை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

வெவ்வேறு ஆதன நிறுவனங்கள் 2022 இல் வித்தியாசமான பெறுமதியான ஆதன அதிகரிப்பைத் தெரிவிக்கின்றன. எனினும் CREA (Canadian Real Estate Association) 7.6% விலை அதிகரிப்பை எதிர்வுகூறுகிறது. எதிர்வு கூறப்பட்ட பெறுமதிகளில் இதுவே மிகக் குறைந்த அதிகரிப்பு வீதமாகும்.

**4.மெய்நிகர் (Virtual) முறையில் ஆதனம் வாங்குதல்.**

2021ஆம் ஆண்டின் இரண்டாம் காலப் பகுதி கோவிட்-19 இன் பாதிப்புக் குறை வடைந்து இருந்தபோதிலும் கனடியர்கள் மெய்நிகரில் ஆதனத்தைப் பார்வையிட்டு ஆதனம் வாங்கிய முறை பிரசித்தி பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. 2022 இலும் இந்த நிலைமை தொடரும்.

**5. ஒன்ராறியோ மாகாணத் தேர்தல் (ஜூன் 02/2022)**

இவ்வருடத்தில் ஒன்ராறியோ மாகாண அரசினதும் மற்றும் உள்ளூராட்சி சபைகளினதும் தேர்தல் நடைபெற உள் ளது. ஆதனம் பெறுவதில் இருக்கும் நிலைப்பாடுகள் பற்றி தேர்தலில் முக்கிய மாகப் பேசப்படும். இன்றைய நெருக் கடியைத் தீர்க்க அதிகளவு ஆதாரங்கள் சந்தைப்படுத்தப்பட வேண்டும் அல்லது நிர்மாணம் செய்தல் வேண்டும். அதிக அளவு ஆதனங்களை நிர்மாணம் செய்வ தற்கு குறிப்பிட்ட காலத்துக்குள் உள்ளூராட்சி சபைகள் வழிமுறைகளை உருவாக்க வேண்டும். தேர்தலை முன்னிட்டு பல விதமான சலுகைகளை ஒன்ராறியோ மக்களிற்குக் கொடுக்க முன்வருவார்கள்.

2020 ஆம் ஆண்டுடன் உடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டில் 11.9% குறைவான ஆதனங்களே சந்தைப் படுத்தப்பட்டன. இதனால் ஆதன விலை யில் மிகவும் அதிகரிப்பு ஏற்பட்டது.

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாத சராசரி ஆதன விலையுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாத சராசரி ஆதன விலை 24.2% இனால் அதிகரித்து $1,157,847 ஆகக் காணப்பட்டது. பொது வாக ஜனவரி,ம் பெப்பிரவரி மாதங்களில் ஆதன வியாபாரம் மந்தமாகக் காணப் படுவது இயல்பு. ஆனால் இப்பொழுது இதற்கு முற்றிலும் மாறாக ஆதன விலை அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது. இப்படியாயின் 2022 இளவேனிற்காலத்தில் ஆதன வியாபாரம் எவ்வாறு இருக்கலாம்.






# MORTGAGE & LINE OF CREDIT




⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



## ஜெ(Jey)இராசதுரை

MBA, BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinic canada.com

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students $20per sign

# இந்தியப் பிரதமருக்கு அனுப்பவுள்ள ஆவணம்!




இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்காக இந்தியாவை அணுகுவது தொடர்பில் தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து மூன்று கட்டமாக கலந்துரையாடல்களை மேற்கொண்டன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதனால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கலந்துரையாடல்களில் தமிழ் பேசும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் பங்கேற்றன.



குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தற்போது இந்தியப் பிரதமரிடம் வழங்குவதற்கான ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணம் விரைவில் இந்தியப் பிரதமருக்கு இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் ஊடாக கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆவணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கையெழுத்திட்டுள்ளார் என்றும், ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் கையெழுத்திட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இந்த ஆவணத்தில் கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அக்கட்சிகள் தமிழ் தேசியக் கட்சிகளின் கோரிக்கைகள் விடயத்தில் வெளியில் இருந்து ஆதரவு தெரிவிக்க உறுதியளித்துள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை, இது தொடர்பில் அரசாங்கம் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளது. மலையக தமிழ் கட்சிகள் மற்றும், முஸ்லிம் கட்சிகளைத் தவிர்த்து வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் மாத்திரம் கையொப்பமிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆவணம் அனுப்பப்படுமாக இருந்தால் அது விடுதலைப்புலிகளின் கனவான தமிழீழத்திற்கான வரைபாகவே இருக்கும் என்று அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளில் தலையிட வெளிநாடுகளுக்கு அனுமதி இல்லை. இலங்கை அரசுதான் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும். ஆனால், தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் சர்வதேசத்தை நாடுவதுதான் விசித்திரமாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் கருத்து இவ்விதமிருக்க, தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையேயும், நடைபெற்ற கலந்துரையாடல் குறித்தும் இந்தியப் பிரதமருக்கு வழங்கப்படவிருக்கும் ஆவணம் குறித்தும் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இதனை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடுமையாக சாடியுள்ளது.

13ஆம் திருத்தம் தமிழ் மக்களுக்கு உருவாக்கப்பட்ட சதி என்றும், அதனை அமுல்படுத்த வேண்டுமெனக் கோரி மிக மோசமான ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அதன் மூலம் சுயநிர்ணய உரிமையை தமிழ் மக்கள் அனுபவிக்கலாம் என கூறுமளவிற்கு துரோகத்தனம் நடைபெறுவதாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னணி மக்களை அணிதிரட்ட முடிவெடுத்துள்ளதாகவும், இம் மாதம் 30ஆம் திகதி போராட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவிருப்பதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்போராட்டத்தை கொண்டு செல்ல விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதே வேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதன்மைக் கட்சியாக உள்ள இலங்கை தமிழரசுக் கட்சிக்குள்ளும் இவ்விடயங்கள் தொடர்பில் முரண்பாடுகள் உள்ளன.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட குறித்த ஆவணத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக இப்போது தமிழ் தேசியக் கூட்டமைபின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமருக்கு தமிழ் கட்சிகளால் அனுப்பப்படவிருக்கும் கடித விடயத்தில் தமிழரசுக்கட்சி கவனம் செலுத்தத் தொடங் கியதிலிருந்து அதன் பொருள்,



அதனு டைய நோக்கம், அது எதனைக் கோருகின்றது, அதன் தலையங்கம் அனைத்தையும் மாற்றியமைத்திருக்கின்றோம் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அந்த ஆவணம் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்தச் சொல்லி கோரிக்கை விடும் கடிதம் என்று கூறப்படுவது தவறானது என சுமந்திரன் விளக்குகின்றார்.

அதிலே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்ன என்பது குறித்தும், இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பிறகு இலங்கையிலே இடம்பெற்றிருக்கக் கூடிய முன்னெடுப்புக்கள் என்ன என்பது பற்றியும், இலங்கை அரசாங்கங்கள் இந்தியாவிற்கு கொடுத்திருக்கும் வாக்குறுதிகள் எவை என்பது தொடர்பிலும் தெளிவாக சொல்லப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிடுகின்றார்.

அதனடிப்படையில் 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்.



அத்தோடு நிற்காமல் அதற்கும் அப்பால் சென்று ஒரு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று இலங்கை அரசு இந்தியா உட்பட உலக நாடுகளுக்கு தொடர்ச்சியாக வாக்குறுதி வழங்கியுள்ளது. அதைத்தான் இந்த கடிதம் கோருகின்றது என்றும் சுமந்திரன் கூறுகின்றார்.

இதே வேளை, முதலில் 13ஆம் திருத்தத்தை கோரும் கடிதமாகவே அந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டதாகவும், இலங்கை தமிழரசுக் கட்சி அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கவில்லை என்றும், தமிழரசுக்கட்சி அதில் ஈடுபட ஆரம்பித்த போது 13ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தமிழ் மக்களின் அபிலாசை அல்ல என்ற தங்களுடைய தெளிவான நிலைப்பாட்டை சொல்லியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒற்றையாட்சி அமைப்பிற்குள்ளே வழங்கப்படும் அதிகாரப் பகிர்வான 13வது திருத்தம் பயனற்றது என்பதே தங்கள் நிலைப்பாடு என்றும், ஆனால், அதைக் கூட இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றாத காரணத்தினால் அதை நிறைவேற்றி அதற்கும் அப்பால் சென்று கொடுத்த அதிகாரங்களை மீளப்பெற முடியாத ஒரு முறை வேண்டும் என்று இந்த கடிதம் கோருகின்றது என்றும் சுமந்திரன் கூறுகின்றார்.

எது எவ்வாறிருப்பினும், 13ஆம் திருத்தத்தில் உள்ளவற்றைக் கூட இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கப் போவதில்லை என்பதுதான் உண்மை.

விளம்பரம்
VLAMBARAM

32ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## வாழ்க்கை குறுகியது, ஆனால் அழகானது...

அன்று: குறைந்த வருமானம் நிறைந்த நிம்மதி.
இன்று: அதிக வருமானம் குறைந்த நிம்மதி.
அன்று: கை வீசி நடந்தோம்.
இன்று: கைபேசியுடன் நடக்கிறோம்.
அன்று: படித்தால் வேலை.
இன்று: படிப்பதே வேலை.
அன்று: ஓடினோம் வயிற்றை நிறைக்க.
இன்று: ஓடுகிறோம் வயிற்றை குறைக்க.
அன்று: உணவே மருந்து.
இன்று: மருந்தே உணவு.



# அரசாங்கத்தின் உள்ளேயே ஏற்பட்டுள்ள கொதி நிலை!

**- விகிர்தன் -**

கோட்டாபய ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கத்தின் போக்கை அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களே கடுமையாக விமர்சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை சகித்துக்கொள்ள முடியாத நிலையிலேயே இராஜாங்க அமைச்சர் பதவி வகித்த சுசில் பிரேமஜயந்த அதிரடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை ஏனையோருக்கு எச்சரிக்கை விடுப்பதாகவும் அமைந்துள்ளது.

முதலில், அரசாங்கத்தில் அமைச்சராக உள்ள விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் அரசாங்கத்தை பொது வெளியில் விமர்சித்து வந்தனர். அதனைத் தொடர்ந்து அமைச்சர்கள், இராஜகாங்க அமைச்சர்கள், பொதுஜன பெரமுனவில் அங்கம் விகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலர் அரசாங்கத்தின் இயலாமையை விமர்சிக்கத் தொடங்கினர்.

ஜனாதிபதியால் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்நத உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து சிலர் தற்போது அடக்கி வாசிப்பதாக தெரிகின்றது. அவர்கள் சுசில் பிரேம ஜயந்த பதவி நீக்கம் செய்யபட்டமை தொடர்பில் கூட எந்தக் கருத்தையும் வெளியிடாமலிருக்கின்றனர். ஆனாலும் ஓரிருவர் தொடர்ந்து அரசாங்கம் மீதான தங்கள் விமர்சனங்களை முன்வைத்தே வருகின்றனர்.

அமைச்சர் விமல் வீரவன்ச அவரது கருத்தை மெல்லிய தொனியில் வெளிப்படுத்தியிருக்கின்றார். நாட்டின் தற்போதைய நிலைமையில் அமைச்சுப் பதவிகளில் இருப்பர்வர்களை நீக்குவது உசிதமான காரியமல்ல எனவும், நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி நிலைமையிலிருந்து நீங்கி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நல்லிணக்கத்துடன் பயணிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு தேசிய அமைப்பை உருவாக்கி நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி நிலைமையில் இருந்து மீண்டெழுவதற்காக நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய நேரமே இது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், அமைச்சுப் பதவிகளில் இருப்பர்வகளை நீக்குவது உசிதமான காரியமல்ல. வெளியில் இருப்பவர்களையும் இணைத்துக்கொண்டு நல்லிணக்கத்துடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் அரசாங்கத்தின் தவறுகளை



உணர்ந்தாலும் அதனை வெளிக்காட்டாமல் இருந்து வருகின்றனர். சிலர் அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்கும் நிலையில் எல்லாவற்றிற்கும் ஆதரவு தெரிவிப்பதான கருத்துக்களை வெளியிட்டு ஜனாதிபதிக்கு நல்ல பிள்ளையாக இருக்க முற்படுகின்றனர். அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் போன்றவர்களை இதில் சேர்க்கலாம்.

அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை தகுதி அற்றவர்கள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ குறிப்பிடுகின்றார். தகுதியில்லாதவர்களை அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதியான தனக்கு முழு அதிகாரம் உண்டு என அவர் கூறுகின்றார்.

அரசின் முதுகெலும்பாக அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் இருக்க வேண்டும். அவ்வாறானவர்கள் அரசையும், அதன் கொள்கையையும் பொதுவெளியில் விமர்சிப்பது எந்த வகையில் நியாயம்? அவர்களுக்கு அமைச்சுப் பதவி எதற்கு? இது அவர்களின் ஒழுக்கமின்மையையும், தகுதியின்மையையும் எடுத்துக் காட்டுகின்றது என்றும் அவர் சாடியுள்ளார்.

அவ்வாறானவர்களை பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதியான தனக்கு முழு அதிகாரம் உண்டு என்றும், இது தொடர்பில் யாருடனும் ஆலோசனை நடத்த தேவையில்லை என்றும் அவர் கடுமையான தொனியில் தெரிவித்துள்ளார்.

கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டிய இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பொது வெளியில் அரசைக் கண்டபடி விமர்சித்திருந்தார். அதனால் அவர் பதவியை இழக்க வேண்டி வந்தது எனவும் அவர் கூறினார்.

ஆனால், சுசில் பிரேமஜயந்தவை விடவும் மற்றுமொரு இராஜாங்க அமைச்சரான நிமல் லன்சா அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து வந்துள்ளார். மக்கள் இன்று எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளை அரசாங்கம் கண்டும் காணாதது போல் நடந்துகொள்வதாக அவர் அடிக்கடி குற்றம் சாட்டி வருகின்றார்.

மக்களின் பிரதிநிதிகள் மக்களின் பிரச்சினைகளை கேட்க வேண்டும். அதனை அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லவும் வேண்டும். அவ்வாறு மக்களின் பிரச்சினைகளை பேச முடியாவிட்டால் இராஜாங்க அமைச்சர் பதவியை தூக்கியெறிய தான் தயாராக உள்ளதாக நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேம ஜயந்த பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பாகவே நிமல் லன்சா இவ்வாறு கருத்துக்களை வெளியிட்டிருந்தார். சுசில் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னரும் அவர் தனது விமர்சனங்களை வெளியிட்டவாறே இருக்கின்றார்.

மக்களை வரிசைகளில் நிற்க வைத்து அலைய விடத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ள அவர், அதனை கண்டும் காணாதது போல இருக்க முடியாது என்றும், அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் வார்த்தைகளில், மக்களின் குரலே ஒலிக்கின்றது. ஆகையால், விமர்சனங்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும் என்றும் அவர் கூறுகின்றார்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்றால், எதிர்காலத்தில் தானும் வீதிக்கு இறங்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் கடுமையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஊடகங்களில் ஜனாதிபதி சிரிக்கிறார். இவ்வாறான தலைவர் பதவி விலக வேண்டும் எனவும் நிமல் லன்சா தெரிவித்து உள்ளதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு கடுமையான கருத்தக்களை தெரிவித்து வரும் நிமல் லன்சா ஏன் பதவி நீக்கம் செய்யப்படவில்லை என்ற கேள்வியும் எழுகின்றது. கோட்டாபய அரசாங்கத்தின் உள் பிரச்சினைகள் பலவற்றை தெரிந்து வைத்திருப்பவர்கள் மீது இவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் ஜனாதிபதி இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

அரசை கடுமையாக விமர்சிக்கும் மேலும் இரு இராஜாங்க அமைச்சர்களையும் பதவி நீக்குவது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தற்போது ஆராய்ந்து வருகிறார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு அவர்களைப் பதவி நீக்கினால் அரசியலில் சிக்கல் ஏற்படலாம் என அவருக்கு நெருக்கமானவர்கள் ஆலாசனை வழங்கி வருவதாகவும், இதனையடுத்து ஜனாதிபதி பதவி நீக்கும் அதிரடி நடவடிக்கையிலிருந்து சற்று பின்வாங்கி உள்ளதாகவும் தெரியவருகின்றது.

எனினும், விரைவில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ள நிலையில், அமைச்சு மற்றும், இராஜாங்க அமைச்சுப் பதவிகளிலும் மாற்றம் வரவுள்ளதாகவும், இதன் போதே குறித்த இரு இராஜாங்க அமைச்சர்கள் பதவி நீக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தி, ஜனாதிபதி தனக்கு ஆதரவானவர்களை வைத்திருப்பதால் அரசாங்கத்தின் இயலாமையை மூடி மறைத்துவிட முடியாது. வீதிகளில் செல்லும் அமைச்சர்களின் வாகனங்களை கண்டவுடன் 'ஊ' என்று சத்தமிடும் நிலைக்கு பொதுமக்கள் வந்துவிட்டனர். நிலைமை இவ்வாறு தொடர்ந்தால் நாடு முழுவதும் மக்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்யும் நிலைதான் ஏற்படும்.

> ஆயிரம் தடவை உன் சந்தேகத்தை நேரே கேள். அது சிறிய கோபத்தை உருவாக்கும். ஆனால் பதில் கிடைத்து விடும். ஆனால் உன் சந்தேகத்தை நேரே கேட்காமல் உன்னுள் வைத்து மறைமுகமாய் ஒருவனைக் காயப்படுத்தாதே. அது உனக்கு எல்லையற்ற துன்பத்தைத் தந்துவிடும்


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 6, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 81



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே! உங்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துகள். ஒமிகிரன் (Omicron) பெருந்தொற்று எங்கும் பரவ லாகப் பரவி வருவதாகக் கூறப்படுகிறது. மூக்கு ஒழுகுதல், தலைவலி, சோர்வு, (லேசான அல்லது கடுமையான), தும்மல், தொண்டை வலி போன்ற அறிகுறிகள் காணப்படுவதாக தரவுகள் கிடைக்கின்றன. இந்த அறிகுறிகள் டெல்டா விற்கான அறிகுறிகளைக் கொண்டதாக உள்ளது. பாதிக்கப்படுபவர்களில் 50 சதவீதமானவர் களுக்கு மட்டும் காய்ச்சல், இருமல் அல்லது வாசனை அல்லது சுவை உணர்வு இழப்பு போன்ற மூன்று அறிகுறிகள் மேலதிகமாக உள்ளதாம். ஒமிகிரன் நோய்த்தொற்றுகள், குறிப்பாக முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர் களில் மீண்டும் தொற்றுகள் மற்றும் திருப்புமுனை நோய்த்தொற்றுகள், மற்ற வகைகளால் ஏற்படும் நோய்த்தொற்றைக் காட்டிலும் கடுமையான நோய் ஏற்படுத்துமா என்பது பற்றி இன்னும் முழுமையான தரவுகள் இல்லை.

இது நாடு மற்றும் உலகம் முழுவதும் பரவி வரும் புதிய வகைப் பெருந் தொற்றாக மாறியுள்ளது. வட அமெரிக்கா. இங்கிலாந்து, மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் உட்பட 110 நாடுகளில் ஒமிகிரன் இனது பாதிப்புகள் பதிவாகியுள்ளன. தென்னாப்பிரிக்காவில் முதன்முதலில் கண்டறியப்பட்டது. டெல்டா மாறுபாடு கோவிட் அறிகுறிகளிலிருந்து வேறுபடு கின்றன என்று மருத்துவ வல்லுநர்கள் கூறியுள்ளனர். ஒமிகிரன் அறிகுறிகள் என்ன என்பதை பொதுமக்கள் அறிந்து புரிந்துகொள்வது இன்னும் முக்கியமானது.

ஒமிகரன் மிகவும் பரவக்கூடியது. ஏனெனில் இது மற்ற வகைகளை விட அதிக எண்ணிக்கையிலான பிறழ்வுகளைக் கொண்டுள்ளது. இந்த பிறழ்வுகளில் சில பிற கோவிட் வகைகளில் (பீட்டா மற்றும் டெல்டா) தோன்றியிருந்தாலும், விஞ் ஞானிகள் இதற்கு முன்பு பார்த்திராத புதியவற்றை ஒமிகிரன் காட்டியுள்ளது. இந்த புதிய பிறழ்வுகள் வைரஸின் ஸ்பைக் புரதத்தில் அமைந்துள்ளன. இது எவ்வளவு தொற்றுநோயானது என்பதை இது தீர்மானிக்கிறது.

உலக சுகாதார அமைப்பு (WHO) ஒமிகரன் "முந்தைய நோய்த்தொற்றுகளை விட விரைவான விகிதத்தில் கண்டறியப் பட்டுள்ளது, இந்த மாறுபாடு ஒரு வளர்ச்சி நன்மையைக் கொண்டிருக்கலாம்" என்று கூறுகிறது. இந்த பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீளு வதற்கு இயற்கை வழிவகைகளையும், வீட்டு மருத்துவத்தையுமே அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

தேசிக்காய் அல்லது எலுமிச்சம் பழம், தேயிலை, மஞ்சள் ஆகியவற்றை நீருடன் சேர்த்து நன்றாக அவித்து நீராவியில் வேது பிடிப்பது ஒரு முக்கியமான வழிமுறையாக இருந்தது.

அடிக்கடி வெந்நீர் குடித்தல், விற்றமின் சி அல்லது விற்றமின் சி அதிகமாகவுள்ள எலுமிச்சம் பழச்சாறு, தேசிக்காய்ச் சாறு,



ஆரஞ்சுப் பழச்சாறு ஆகியவற்றை இஞ்சி சேர்த்து அருந்துதல், மென்சூடான உப்பு நீரில் வாய் கொப்பளித்தல், நிலவேம்புத் தாள் சிறிதளவு வெந்நீரில் போட்டு மூடிவைத்துப் பின்பு குடித்தல், வேம்புப் பட்டை அவித்துக் குடித்தல் போன்ற வழிமுறைகளைக் கையாளலாம் எனக் கூறப்படுகிறது. மிளகு அவித்த வெந்நீர் அருந்துவது நல்லது எனக் கூறப்படுகிறது.

கொரோனாவில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மேலும் சில வழிவகைகளைக் கவனிப்போம்.

வயிற்றை காலியாக விடவேண்டும், தினமும் ஒரு மணி நேரம் சூரிய ஒளியை அனுபவிக்கவும், குளிரூட்ட பயன்படுத்த வேண்டாம், வெதுவெதுப்பான நீரை அருந்தவும், தொண்டை புண் வராமல் இருக்கும், ஒவ்வொரு காய்கறிக்கும் அரை டீஸ்பூன் தூள் இஞ்சி சேர்க்கவும், இலவங்கப்பட்டை பயன்படுத்தவும், இரவில் பாலுடன் மஞ்சளைக் கலந்து குடிக்கவும், வீட்டில் கற்பூரம் மற்றும் கிராம்பு கொண்டு புகையை பரவச் செய்யலாம். காலையில் தேநீரில் கிராம்பு சேர்த்து கொதிக்க வைத்து குடிக்கவும்.

முழு மிளகு (10-12) சூடான நீரில் இரண்டு மணி நேரம் ஊறவிட்டு நீங்கள் விரும்பினால் தேன் சேர்த்து நாள் முழுவதும் குடிக்கவும்.

கப்பூரவல்லி மற்றும் வெற்றிலை 2-3 இலைகள் - சிறிது நெய் சேர்த்து சிறிது கிளறி 2 தேக்கரண்டி மல்லி, சிறிது சீரகம், சிறிது ஓமம், சுமார் 10 முழு கரும் மிளகு, 5 கிராம்பு பூண்டு, சிறிது இஞ்சி, பாத்திரத்தில் சேர்க்கவும் கிளறி பின்னர் 3 குவளை தண்ணீர் சேர்த்து மெதுவாக கொதிக்க விடவும். மூன்றில் இரண்டு பங்கு நீர் எஞ்சும்வரை கொதிக்க விட்டு பிறகு சிறிது பெருங்காயம் மற்றும் உப்பு போடவும். ஒரு நாளைக்கு இரண்டு முறை குடிக்கவும் உணவுக்கு முன் சாப்பிடுவது சிறந்தது.

முழங்காலை ஊன்றியவாறும், தலையை தரையில் தொடவும் குனிந்து அமர்ந்த வாறு மூச்சுப் பயிற்சி செய்ய வேண்டும். இதனால் சுவாசப்பைக்கு அதிகமான ஒக்சிசன் கிடைக்கும். இடைக்கிடை இருமி சளியை வெளியேற்றிக் கொள்ள வேண்டும். இந்த வழிவகையை பெருந் தொற்றுக் காலத்தில் மருத்துவர் ஒருவர் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்திருந்தார்.

மஞ்சள் துண்டை தீயில் பற்றவைத்து வருகின்ற புகையை மூக்கிற்கு அருகில் வைத்து சுவாசிக்க வேண்டும். இது சளித் தன்மையைப் போக்கவும், இருமலைக் குறைக்கவும் உதவும். வெற்றிலை, கற்பூரவள்ளி இலை ஆகியவற்றை உப்பு நீரில் கழுவி வாயில் போட்டு மென்று சாற்றினை உறிஞ்சி உட்கொள்ளலாம். சளித்தன்மையைப் போக்க உதவும்.

நாமெல்லோரும் சுகாதார அறிவித்தல் களைக் கவனத்தில் எடுத்து மிகவும் அவ தானமாக தொடர்ந்து இருக்க வேண்டிய நிலை உள்ளது. புதிய புதிய வடிவங் களில் பெருந்தொற்று உருவாகிக் கொண் டிருப்பது மிகுந்த கவலையளிக்கின்றது. இன்றைய தொடர்கட்டுரையில் பெருந் தொற்றுக் காலத்தில் உதவக்கூடிய இயற்கை வழிமுறைகளைப் பற்றிக் கவனம் செலுத்தினோம். சமூக இடை வெளி பேணுதல், முகக்கவசம் அணிந்து கொள்ளுதல், தடுப்பூசி போட்டுக் கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

**இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.**

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)

VRONS Immigration Services Ltd.
647 559 7780
4544 Sheppard Ave East, Unit 231
Toronto, ON, M1S 1V2
info@vrons.ca www. vrons.ca
vronscanada 647 559 7780
VISIT | STUDY | WORK | IMMIGRATE
Temporary Entry
• Study/ PGWPs
• LMIA/ Work Permits
• Caregivers
• Visitor/ TRP/ Super Visa
Permanent Entry
• Express Entry/ FSW/FST/CEC
• Family Sponsorships
• PNP Applications
• Business / Start-up Visa
Refugees
• Pre Removal Risk Assessments
• Humanitarian & Compassionate Applications
PRs & Citizens
• Citizenship Applications
• PR card Renewals
• Adoptions
Study Permit Fees Starts From : 500$
Study in leading Canadian Universities & Colleges.
Scholarships available for eligible students
மேலதிக தொடர்புகளுக்கு அழையுங்கள்
PRANAVAN SOMARAJA RCIC, MBA
Regulated Canadian Immigration Consultant
Member of CICC Member No.: R705979
CAPIC ACCP

# Buying Home / Selling / Investing

## Knowledge . Experience . Dedication



அனைவருக்கும் தித்திக்கும்
பொங்கல் நல் வாழ்த்துக்கள்..
அனைத்து மக்களும் எல்லா
நலன்களும்,வளங்களும் பெற்று மகிழ்வாக
வாழ என் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

HOMELIFE HIGHER STANDARDS


**Indra** Michael Xavier
BROKER
**647 995 6829**
*indra.m.xavier@gmail.com*

**HomeLife/ Future**
Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr. Markham ON, L3S 4N8
**Office: 905-201-9977** Fax: 905 201 9229
*Independenlty Owned and Operated

# Just LISTED




Excellent Opportunity To Buy A 97 Acre Farm! 2010' Frontage On Paved Rd Close To Town 30 Acres Farm, 2Lots, Remainder Forest And Pasture With River Running Through! Over 2000 Sqft Beautiful Brick Bungalow, 3 Bdrms & 3 Bathrooms Main Floor Family Rm Eat-In Kitchen & Full Walkout Basement. Taxes Are Based On Farm Rate.





HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc., Brokerage
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8

**SASIKUMAR**
SHANMUGANATHAN
REAL ESTATE BROKER
**416.709.5000**
realtorsasikumar@gmail.com

**#1 HOMELIFE TEAM IN ONTARIO**
KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS




# குருப்- திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

கேரளாவில் மிகவும் தேடப்பட்டு வரும் ஒரு குற்றவாளி சுகுமார குருப் என்பவர். அவரது வாழ்க்கை, படமாக மலையாளத்தில் எடுக்கப்பட்டு தமிழிலும் 'குருப்' என்ற பெயரில் வெளியானது.

இதில் கோபிகிருஷ்ணா குருப் (துல்கர் சல்மான்) என்பவர் தனது பாடசாலை பரீட்சையில் சித்தி பெறாததால், அவரது



குடும்பத்தால் இந்திய விமானப் படையில் (IAF) சேர்க்கப்படுகிறார். வகுப்பில் குழப்படி செய்யும் கோபி எப்பொழுதும் தனது மேலதிகாரிகளிடம் ஏச்சும், தண்டனையும் வாங்குகிறார். ஒருவழியாக பயிற்சியை முடிக்கும் அவருக்கு மும்பையில் இராணுவத்தில் வேலை கிடைக்கிறது. அங்கு அவர் கஷ்டப்படுவதால் தற்கொலை செய்கிறார்.

இதை அவரது நண்பரும், காதலியும், ஐயுகும் நம்புகின்றனர். ஆனால், கோபி இறக்கவில்லை. இதுவே இப்படத்தில் காட்டப்படும் கோபியின் முதல் பெரும் ஏமாற்றும் செயலாகும்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு சில வருடங்களில் குருப் எனவழைக்கப்படும் கோபி மறுபடியும் இறக்கிறார். ஆனால், இம்முறை அவரால் மக்களை ஏமாற்ற முடியவில்லை. இந்த நிகழ்ச்சியும் இதற்கு பின் குருப்பை கேரள நாட்டு காவலதிகாரிகள் தேடிய முயற்சி பற்றியதும் தான் இப்படத்தின் கதை.

ஏன் குருப் இவ்வாறு செய்தார்? காவல் அதிகாரிகள் அவரைப் பிடிப்பார்களா? என்று படத்தைப் பார்த்து அறியுங்கள்.

குருப்பின் சிறுவயதில் தொடங்கி, அவரைத் தேடிய காவலதிகாரி 2005இல் இளைப்பாறும் வரை நடக்கும் பல தசாப்த கதையை ஆராய்ந்து எழுத இயக்குநருக்கு ஐந்து வருடம் எடுத்தது. இந்த ஆராய்ச்சி படத்தில் தெளிவாகத் தெரிகிறது.

உண்மையான குருப்பின் கதையுடன் இப்படத்தை ஒப்பிடும்போது பெருமளவிற்கு இவ்விரண்டும் பொருந்துகின்றன. குருப் ஐயுகுல் சேர்ந்தது, இறந்ததாக செய்தி அனுப்பியது, அவரது குடும்பத்திற்கு வேலை செய்த பெண்ணின் மகளைத் திருமணம் செய்து வெளிநாடு சென்றது, அவர் செய்த கொலையின் விபரங்கள் போன்றவை படத்தில் காட்டப்படுகின்றன. சில பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. குருப்பின் கதையை அவரிடமிருந்தே கேட்க



முடியாததால் சில காட்சிகள் படத்தின் போக்கை அதிகரிக்க சேர்க்கப்பட்டுள்ளன. இருந்தாலும் இக்காட்சிகள் நன்றாக அமைந்துள்ளன. இப்படத்தில, கதையும் நிகழ்ந்த (Chronological) ஒழுங்கில் நடைபெறாமல் காவலதிகாரி விசாரணை செய்வதுபோல, வெவ்வேறு காலங்களுக்கு முன்னும் பின்னும் செல்வது இப்படத்தை சிறப்பாக்குகிறது.

1948இல் நடைபெற்ற இப்படத்தின் முக்கிய சம்பவத்தைப் பற்றியும் கேரளாவில் தேடப்பட்டு வந்த பிரபலமான குருப்பை பற்றியும் அறிய விரும்புவோர் இந்தப் பொழுது போக்குப் படத்தைப் பார்த்து இரசிக்கலாம்.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville



Mr.S.J.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுங்கள்.
இன்றே உங்கள் பூஸ்டர் தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.
கோவிட்-19 -இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
நமது பாதுகாப்பு நம் அனைவரின் கையில்.



ontario.ca/covid19 -ஐ சென்று பாருங்கள்
Ontario

# புறந்தள்ளுங்கள்




## AVOID

*ஒருவரைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டால் இந்த உலகில் பெரும்பாலான பிரச்சினைகள் மறைந்து விடும். - ரொனால்ட் ரீகன்*

ஏதோ ஒரு நிகழ்ச்சிக்கோ அல்லது யாரையாவது சந்திக்கச் செல்லும்போது நீங்கள் அங்கிருப்போரிடம் சாதாரணமாக, சந்தோசமாகப் பழகிக் கொண்டிருக்க அதில் சில பேர் உங்களை விலகியிருக்க அல்லது தவிர்த்துக்கொள்ள விரும்புவது போல் பட்டும்படாமலும் பழகிய அனுபவம் உங்களுக்கு என்றேனும் நிகழ்ந்துள்ளதா?



திடீரென என்ன ஆயிற்று இவர்களுக்கு, நன்றாகத்தானே பழகிக் கொண்டிருந்தார்கள் என்று பலவாறு உங்களை நீங்களே கேள்வி கேட்டு அவர்களுடன் அன்றுவரை நடந்த நிகழ்வுகளையெல்லாம் திரும்பத் திரும்ப மனதில் ஓடவிட்டு ஏதேனும் தவறுதலாக நடந்ததா என்றெல்லாம் ஆராய்ந்து, ஒன்றும் புரியாமல் குழம்பிய மனதுடன், சென்றிருந்த நிகழ்ச்சியை மகிழ்ச்சியாக அனுபவிக்க முடியாமல் தவித்திருப்பீர்கள்.

உங்களைப் பற்றி ஏற்கனவே யாரோ ஏதோ சொல்லி அங்கிருந்தவர்களிடம் உங்களைப் பற்றிய ஒரு தவறான புரிதலை ஏற்படுத்தியிருந்து பின்புஅதனை அறிய வரும்போது உங்களுக்குள் ஏற்படும் இயலாமையும் வருத்தமும் உங்களை சோர்வடையச் செய்யும். உங்களைப் பற்றிய தவறான எண்ணங்களை எப்படிச் சரி செய்வது என்று உங்கள் மனம் பதறும்.

இது உங்களுக்கு மட்டும் ஏற்படும் அனுபவம் அல்ல. பல குடும்பங்களில் மட்டும் நடக்கும் விடயமும் அல்ல. வளரும் நாடுகளிலும், வளர்ந்த நாடுகளிலும், மிகவும் நாகரிகமானோர் என்று சொல்லிக் கொள்ளக் கூடியோர் மத்தியிலும் மேலோங்கிக் கொண்டிருக்கும் பழக்கம்தான் இது என்கிறது வாழ்வியல்.

உலக அளவில் 60 சதவீதம் மக்கள் ஒருவரைப் பற்றி மற்றவர் ஏதேனும் பேசுகிறார்கள் என்கிறது மேலைநாட்டு ஆய்வு ஒன்று. மேலும், சிலர் மற்றவர்களைப் பற்றிக் தாழ்வாகப் பேசுவது தங்களை உயர்வாக நினைக்கச் செய்யும் என்று நினைத்துக் கொள்கின்றனர். மற்றவர்களுக்குத் தெரியாத ஒரு விடயத்தை தாங்கள் சொல்வது அவர்களுக்கு சுவாரஸ்யமாக **(interesting)** இருக்கிறது. ஆனால் உண்மையில் புறம் பேசுவோர் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்ளவே செய்கின்றனர். இவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்ற எண்ணத்தைத்தான் பிறர் மனதில் விதைக்கின்றனர் என்கிறது அந்த ஆய்வின் முடிவு.

புறம் பேசுதல் என்பது ஒருவரைப் பற்றித் தவறாக, எதிர்மறையான கருத்துக்களை அவர் இல்லாதபோது மற்றவர்களிடம் பேசுவது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒருவர் இன்னொருவரைப் பற்றி அவர் இல்லாத போது பேசுகிறார் என்னும் போதே அதன் உண்மைத்துவம் கேள்விக் குரியதாகி விடுகிறது. அத்துடன் சொல்பவரின் நம்பகத் தன்மையும் இடறுகிறது.

மனரீதியாக தன்னம்பிக்கை இல்லாதோரும் பிறருடைய கவனத்தை தாங்கள் கவர வேண்டும் என நினைப்போருமே பெரும்பாலும் மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுவர். புறம் பேசப்படுவோரை மட்டுமல்ல பேசுவோரையும் கேட்போரையுமே அது மனரீதியாகப் பாதிக்கும் என்கிறது மனஇயல்.

பொதுவாகப் புறம் பேசுவோர் தங்களை நியாயப் படுத்திக்கொள்ள சொல்லக் கூடிய வார்த்தைகள் "நீங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்; வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி விடக்கூடாது என்பதற்காகத்தான்..." என்பது போன்றே இருக்கும். இப்படி நல்லது கெட்டதை மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவர்களுக்கு விழிப்புணர்ச்சி கொடுப்பதற்காகவும் தான் சொல்கிறோம் என்பர். ஆனால் அதில் எந்த அர்த்தமும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு கல்லூரியில் நூற்றுக்கும் மேற்பட்டோரை சில நாட்கள் ஒரு குழுவாகப் பழக வைத்தனர். பின் அவர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து அவர்களுக்குள் பலருக்கும் பிடித்த இரண்டு பேரைத் தேர்ந்தெடுத்து ஒரு பிரிவினரிடம் அந்த இரண்டு பேரைப் பற்றிய நல்ல விடயங்களைச் சொல்லச் சொன்னார்கள். அத்தனை பேரும் அவர்களைப் பற்றிய நல்லவற்றைச் சொன்னார்கள்.

பின் அதே இரண்டு பேரைப் பற்றி அடுத்த குழுவினரிடம் அவர்களிடம் இருக்கும் தவறான விடயங்களைப் பற்றிச் சொல்லச் சொன்னார்கள். அத்தனை பேருக்கும் சொல்லுவதற்கு விஷயம் இருந்தது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)

கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றிய கேள்விகள் உள்ளதா?

211 ஃபோன் லைன் ஆங்கிலம், பிரஞ்சு மற்றும் 200க்கும் மேற்பட்ட பிற மொழிகளில் உங்களுக்குத் தேவையான தகவல் அல்லது உங்களுக்கு உதவக்கூடிய ஆதாரங்களைக் கண்டறிய உதவும்.

இந்த சேவை இலவசம் மற்றும் ரகசியமானது.

211 ஐ அழைக்கவும்.

Votre gouvernement
Québec

# தை மலர்ந்து வருக வருகவே!

பொங்கல்தனை இனிமைபொங்கப் "பொங்கலோ பொங்கல்
பொலிந்திடுக" என்றேபுத் தரிசி கொண்டு
பொங்கியதைப் புடவிவாழப் பொற்கதிர் வழங்கும்
பொற்புமிகு பரிதிக்குப் படையல்செய்து
பொங்கிநிற்கும் இந்நாளில் தமிழ ரெல்லாம்
புகலரிய ஒற்றுமையை மனதிற் பொங்கிப்
பொங்குமின்பத் 'தமிழ்த்தாயை' நினைந்து வணங்கிப்
போற்றிடவே தைமலர்ந்து வருக வருகவே!



பழையபொருள் கழித்திடவே சேர்த்துத் தீயில்
பலர்கூடி எரித்திடுவர் 'போகி' யன்று!
கழைவதற்கு மனதிற்குள் பலபல இருந்தும்
கழிவுகளைச் சிலர்என்றும் ஒழிப்ப தில்லை
உழைத்துழவர் பெற்றபுது அரிசி பொங்கி
உயர்பண்பாம் நன்றிக்கடன் செலுத்து முன்பு
திழைத்திருப்போர் மனஅழுக்கை எரித்துப் போக்கிச்
சீர்செய்யத் தைமலர்ந்து வருக வருகவே!

"தையும்வர வழிபிறக்கும்" என்ற கூற்றைத்
தாரகமந் திரமெனவே அன்று தமிழன்
ஐயமின்றி நம்பிவாழ்ந்தான்! பயனும் பெற்றான்!
அவசியமென் றேநல்ல விழுமி யங்கள்
மெய்யாக வழிவழியாய்த் தொடர வைத்தான்!
விரும்பாத சிலரின்று அவற்றை மறந்து
பொய்வாழ்க்கை வாழ்கின்றார்! மனதை மாற்றிப்
புடஞ்செயவே தைமலர்ந்து வருக வருகவே!

முந்துதமிழ் முச்சங்கம் எல்லாம் கண்டு
முதுசொம்பல கொண்டதமிழ்! எல்லாம் பெருமை!
சந்ததிக்குத் தமிழைநாம் எடுத்தல் வேண்டும்!
தமிழைச்சிறார் வெட்கமின்றி எங்கும் பேசி
"எந்தநாட்டில் வாழ்ந்தாலும் தமிழை என்றும்
என்னுயிராய்ப் போற்றிடுவேன்" என்று மனதில்
வந்திடுமிப் பொங்கலன்று உறுதி கொள்ள
வைத்தருளத் தைமலர்ந்து வருக வருகவே!

குறையாது பெருகிவரும் 'கொறோனா' வதனால்
குவலயத்தில் மக்கள்படும் கொடுமைகள் எல்லாம்
மறைஞான சம்பந்தன் அருளிப் போந்த
மந்திரமாம் திருமுறையை மனது வைத்தே
முறையாக ஓதமுற்றாய் நீங்கு மென்று
முனைந்துநீயும் எம்மவர்க்குச் செய்தி தன்னை
இறைவாக்காய்ச் செவிமடுக்கச் சொல்வ தற்கு
எழில்பொங்கத் தைமலர்ந்து வருக வருகவே!

**வாசக நேயர்களுக்கு என் அன்புத் தைப்பொங்கல் வாழ்த்து!**

இல்லமெலாம் எழில்பொங்க இனிமைபொங்க
இதயங்கள் அனுதினமும் அன்பிற் பொங்க
நல்லுளங்கள் வாழ்த்திடவெம் நலங்கள் பொங்க
நனிசிறந்து வாழ்வுயர மகிழ்ச்சி பொங்க
நெல்வழங்கும் உழவர்வளம் நிரம்பிப் பொங்க
நினைந்திறைவன் தாழ்தொழுது வாழ்த்து கின்றேன்
எல்லையிலா உயிர்களுக்கு ஒளியைப் பொங்கும்
எழுகதிரோன் அருள்பொங்கப் பொங்கு வோமே!



பல்வைத்திய கலாநிதி பாரதி இளமுருகனார்

# புறந்த...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆக, அந்த இரண்டு பேரும் நல்லவரா? தீயவரா? இப்போது என்ன முடிவுக்கு வர முடியும். உண்மையில் எதை நீங்கள் தேடினாலும் அந்தந்தக் கோணத்தில் அது உங்களுக்குக் கிடைக்கும் என்பதே அந்த ஆய்வின் முடிவு.

குறைகள் இல்லாத மனிதன் உலகில் இல்லை எனும்போது யார் ஒருவரிடமும் என்ன தவறு இருக்கிறது என்று பார்க்க முனையும் போது நிச்சயமாக ஏதாவது ஒரு தவறுதான் தெரிய வரும். அல்லது ஏதாவது ஒன்றைத் தவறாக எடுக்கத் தோன்றும்.

ஏனென்றால் ஆழ்மனதின் நல்லவற்றையும் தவறானவற்றையும் பிரித்துப் பார்க்கும் தன்மை தன் தேவைக்கு ஏற்ப ஒன்றை அனுமானித்துக் கொள்ளும். நீங்கள் என்ன தேடுகிறீர்களோ அதைத்தான் உங்களிடம் கொண்டுவந்து சேர்க்கும். உங்கள் ஆழ்மனதிற்கு நீங்கள் நல்லவற்றைப் பார்க்கப் பழகிக் கொடுக்கிறீர்களா அல்லது தீயவற்றைப் பார்க்கப் பழகிக் கொடுக்கிறீர்களா என்பதே பிரச்சினைக்கும் தீர்வுக்குமான வேறுபாடாக இருக்கிறது.

உங்கள் ஆழ்மனதால் மனிதர்களையும் பொருட்களையும் கூடப் பிரித்துப் பார்க்க முடியாது. நீங்கள் யாரேனும் ஒருவருடைய தவறுகளை உற்றுப் பார்க்கிறீர்கள் என்றால், அது எல்லாவற்றிலும், அதாவது பிற மனிதர்களாகட்டும் அல்லது அன்றாட வாழ்வின் நிகழ்வுகளாகட்டும் அல்லது உயிரற்ற பொருட்களாகட்டும், நீங்கள் சந்திக்கும் அனைத்து விடயங்களிலுமே எதிர்மறையான செய்திகளையே உங்கள் கண்ணில் படச் செய்யும். அதுபோல்



பிறரிடம் சென்று செய்திகளை பேசக் கூடியோருக்கு எதைப் பார்த்தாலும் அதை மற்றவர்களிடம் எப்படி சொல்வது என்ற கோணத்திலேயே தான் அவர்கள் மனம் பார்க்குமே தவிர உண்மையில் சுயமான **(original)** விடயத்தை தனக்குள் பதிய வைத்துக் கொள்ளாது.

பொதுவாக நெருப்பு என்று சொன்னால் சுட்டு விடவா போகிறது. வார்த்தைகள் வலிக்கக் கூடாது என்பர். வார்த்தைகள் வலிக்கும் காலமிது என்று சமூகவியல் (sociology) சொல்வது ஒருபுறம் இருக்க, வார்த்தைகளுக்கு மட்டுமல்ல எண்ணங்களுக்கும் நம்முடைய நரம்பு மண்டலத்திற்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது என்கிறது நரம்பியல் (Neurology). அதனால்தான் இன்று நேர்மறை உளவியல் (Positive Psychology) பல பிரச்சினைகளுக்கும் நேர்மறையான வார்த்தைகளால் தீர்வைத் தருகிறது.

புறம் பேசுவது என்பது கேட்பவருக்கும் பேசுபவருக்கும், ஏதோ அந்தக் காதில் வாங்கி இந்தக் காதில் விடும் சங்கதி அல்ல. ஒரு குதிரையின் வாயில் பூட்டப் படும் கடிவாளம் எப்படி அதன் முழு இயக்கத்தையும் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருமோ அதுபோல் அது உடலில் உள்ள ஒவ்வொரு செல்லுக்கும் கொடுக்கப்படும் சமிக்கை. எதிர்மறையான சிந்தனைகள் ஒருவரின் எண்ணங்களைத் தன்னையே சுற்றிச் சுற்றிவரச் செய்து மன அழுத்தத்தை ஏற்படுத்தி விடும்.

தவிர, பேசப்படும் செய்தி உண்மையாகவே இருந்தாலும், ஒருவரைப் பற்றிய எதிர்மறையான விடயங்களை உற்று நோக்குவது, பேசுபவர், பேசப்பட்டவர், அதைகேட்டுக் கொண்டிருந்தவர் என எல்லோருக்குள்ளும் ஒரு எதிர்மறையைப் பரப்பி விடும்.

அதற்குப் பதிலாக, ஒருவரைப் பற்றி மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# நேரில்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

பாதுகாப்பானவை என யோசிக்கிறேன்" என்றார்.

ஒன்ராறியோ மாகாண கல்வி அமைச்சர் Stephen Lecce, CBC ஊடகத்திற்குத் தெரிவிக்கையில, "பாடசாலைப் பணியாளர்களுக்கு மில்லியன் கணக்கான N95 முகக்கவசங்களும், மாணவர்களுக்கு மூன்று அடுக்கு துணி முகக்கவசங்களும், பாடசாலைகளுக்கு ஆயிரக்கணக்கான HEPA தடுப்பு உபகரணங்களும் அனுப்பப் பட்டுள்ளன. பாடசாலை பணியாளர்களுக்கு விரைவாக மூன்றாவது தடுப்பு ஊசி (Booster Shots) வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒமிக்ரான் திரிபு எம்முன் வைக்கும் சவால்களை உணர்ந்து, மாகாண அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் பாடசாலை



ஆசிரியர்கள் மற்றும் பணியாளர் பாதுகாப்பாக தமது பணியைச் செய்ய உதவும். எங்கள் சிறார்கள் தொடர்ந்து நேரில் கல்வி கற்க எங்கள் அரசால் முடிந்த அனைத்தையும் நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம்" என்றார்.

## BASEMENT FOR RENT

**PORT UNION & LAWSON**
2 Bedrooms bsmt Apartments for rent. Sep. Entrance, 1 parking, laundry. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **416.831.4725**

**KENNEDY & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. March 01, 2022.
தொடர்புகளுக்கு : **416.826.3870**

**STAINES & STEELES**
2 Bedroom BSMT for rent. Sep. entrance, 1 parking, Sep. laundry. Close to TTC, Shopping, Schools, & more. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **647-450-5248**

**MORNINGSIDE & MCNICOLL**
2-bedroom bsmt for rent. Sep.entrance, 1 parking. laundry. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.722.5519**

**STEELES & STAINES RD**
2 Bedroom, 1 washrooms, Sep. laundry, sep. Entrance with 2 parking lot spot. . No smoking & No pets( expecting Srilankan )
தொடர்புகளுக்கு : **416.388.2794**

**SCARBOROUGH**
2 bedroom basement for rent. Sep.entrance, parking, laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.836.5482**

**MORNINGSIDE & SHEPPARD**
Two bedrooms basement for rent. 3 car parking. Sep. entrance. Avail. immediately.
**For more info: 416.201.1222**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. kitchen, dining room, laundry, car parking. Avail. immediately.
**416-276-4664/647-972-9754**

**BOXGROVE & 14TH AVENUE**
2 Bedroom walkout bsmt for rent. 1 washroom, sep. laundry, 1 parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **437.999.4563**

**MCLEVIN & NEILSON**
1 Bedroom bsmt apt.for rent with furniture. Sep. entrance, Parking, laundry. ladies,students couple preferred.Avail. immediately.
**Call/TEXT:- 647.771.8426**

**14TH AVENUE & MCCOWAN**
2 bedroom bsmt for rent (Look New). Sep. Entrance. Parking, Laundry. Close to all facilities. Avail. immediately.
**416.318.7103 / 905.471.9941**

**STAINES / STEELES**
2 bedroom walkout bsmt For rent. Sep.entrance. Sep laundry and dryer. Close to all facilities. Avail. immediately.
**416.579.3022/ 647.327.9007**

மேலும் பக்கங்கள் 14,15,16,17

32 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059　www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca　www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2-bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry.Close to TTC, school. Couple/Small family preferred.
**Contact: 416-258.3256**

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedroom brand new bsmt for rent. Sep. entrance.
**Contact: 416-509.5750**

**MORNINGSIDE & STAINES**
1 bedroom newly renovated new bsmt for rent. Sep. Entrance, Sep. laundry, 1 parking. No pets. 30% utilities. Avail. immediately.
**Contact: 416-414.5520**

**MIDLAND & FINCH**
2 bedroom walk out basement for rent. 1 parking. $1500 for 2 people.
**Contact: 647.470.9968.**

**BELLAMY ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to mall, school, TTC. Family preferred. Avail. immediately.
**647.806.5987 / 647.710.8479**

**9TH LINE & 14TH AVENUE**
2 bedrooms & 2 full washrooms Newly built bsmt for rent. Good location. Close to schools & highways.
**416.918.9848 / 416.857.7603**

**STAINES & STEELES**
2 bedroom bsmt for rent. 1 parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**Contact: 647.889.3217**

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Sep. laundry. 1 parking. Close to all facilities. Avail. immediately.
**Contact: 416.804.0231**

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 parking, laundry . Avail. January 2022.
**Contact: 647.895.6635**

**MARKHAM & 14TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Family preferred. Close to School. Avail. immediately.
**Contact: 647.878.3342**

**MARKHAM & STEELES**
Brand New 1 Bdrm Bsmt for Rent. Sep. entrance. Close to all amenities. 24 hrs. TTC. Available. immediately.
**Contact: 647-893-6491**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & MARKHAM**
2 Bedroom 1 bathroom basement apartment for rent. Newly renovated kitchen & bathroom. Sep. entrance 1 car parking
தொடர்புகளுக்கு : **416.786.7443**

**Eglinton / Midland**
3 Bed + 1 Washroom bsmt for rent. Sep. Entrance, Sep. Laundry , 2 ParkingClose to bus & Kenedy subway. No pets, No smoking
**Call 416.274.6452**

**MARKHAM RD & DENISON**
1 bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Avail. immediately.
**Haran : 416-880-4829**

## ROOM FOR RENT

**WARDEN & ELLESMERE**
1 large bedroom for rent in 2 bedroom Bsmt. Parking, internet. sharing kitchen & washroom
தொடர்புகளுக்கு : **416.294.4631**

**MCCOWAN & DENISON**
1 room for rent in main floor. laundry Close to all facilities. Female preferred. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **647-678-2599**

**NEILSON & MCLEVIN.**
One room for rent in a basement. Laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **(647)766-7779**

**PHARMACY & FINCH**
One room for rent upstairs Separate wash room. Unlimited internet. Close everything.
**For more info call : 416.201.1222**

**BRIMLEY & EGLINTON**
2 Rooms for rent in a bsmt. 1 parking, laundry. Close to all facilities. couple/male preferred.Avail. immediately.
**Contact: 416.830.0472**

**NEILSON & SHEPPARD**
1 bedroom with attached washroom for rent in 2 Bedroom bsmt. Sep. entrance, parking. Close to TTC. Avail. immediately.
**416.400.3462 / 416.856.3542**

**MARKHAM & SHEPPARD**
1 Bed room for rent in main floor Parking, laundry. Female student preferred. Available immediately
**Contact: 647-339-2560**

## ROOM FOR RENT

**MARKHAM**
Room for rent. Walking distance to HWY 7 & 9th LINE . With one car parking. Rent is $650.
**Contact: 416.300.1796**

**DANFORTH & MAGNOLIA**
Rooms for rent in a bsmt. couple/single/small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.529.7320**

**WARDEN & LAWRENCE**
3 அறைகள் கொண்ட basement இல் 1 அறை வாடகைக்கு உண்டு. ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு : **647-708.3444**

**MARKHAM & EGLINTON**
1 Bedroom Rent. Shared kitchen and washroom. Students or working professional preferred. Avail. immediately.
**Contact: 416-473-8729**

**MIDDLEFIELD & FINCH**
Room For rent in a condo( 4th floor) . Available for couple. Rent $1000. Sep. washroom, shared Kitchen.
**Contact: 647.835.5244**

## HOUSE FOR RENT

**MARKHAM/SHEPPARD**
3 Bedroom main flr,1 Bedroom basement, sep entry, laundry & parking. Avail Feb 1, 2022
தொடர்புகளுக்கு: **289.624.6626**

**MARKHAM/BRIMORTON**
3 bedroom bungalow house for rent. 1 bedroom bsmt apartment with sep.entrance with car parks. Avail. immediately .
**416.726.6076/416.299.7876**

**BRIMLEY & EGLINTON**
3 Bedroom, 2 washroom house for rent. Parking, Sep. laundry. Close to school, hospital Avail. End of February, 2022
**Please Call: 647.981.1997**

**BIRCHMOUNT & FINCH**
2-storey townhouse. 3 + 1 bedrooms and 2 + 1 bathrooms. Single garage and 2 exterior parking. Available immediately.
**Contact: 647-289-3436**

**MIDLAND & EGLINTON**
3 Bedrooms & 2 Bathrooms house for rent. 2 parking, Sep. laundry. Close to Kennedy subway. Avail. January 15, 2022.
**Contact: 647-296.7932**

**SHEPPARD & ROUGE RIVER**
Furnished 2 Bedroom townhouse for rent. Sep. entrance, parking. Laundry.Close to all amenities.Avail. Immediately.
**Contact- Uthaya: 416.508.3807**

## APARTMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
1 Bedroom apartment for rent. Close to all facilities.
**Contact: 647. 763.2760**

## BASEMENT FOR RENT
**MARKHAM & BRIMORTON**
2 Room bsmt for rent.
Sep.entrance, Parking, laundry.
Close to all facilities. Small family only Avail. immediately.
**416.575.6226 / 647.341.1657**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent.
Sep. entrance, Parking, laundry.
Close to all facilities.
Avail. February 01, 2022.
**647.884.1125 / 416.587.2704**

## BASEMENT FOR RENT
**Birchmount & Finch**
2 bedroom bsmt with kitchen, washroom, laundry & sep. entrance. Close to TTC, schools, mall. Family preferred.
Avail. January 15, 2022.
**Contact : 416-492-3411**

## BASEMENT FOR RENT
**9TH LINE &14TH AVE** (Markham)
2 or 3 bedroom Brand new bsmt for rent. 2 washroom, sep. entrance, parking, laundry.
Avail. January 15, 2022.
**Contact : 647.965.3383**

## வாடகைக்கு
**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது.
அழையுங்கள்- **647.861.8240**

**உடனடி வாடகைக்கு, விற்பனைக்கு**
வீடுகள், கொண்டோக்கள்
விற்க, வாங்க,
வாடகைக்கு விட,
வாடகைக்கு பெற்றுக்கொள்ள
அழையுங்கள்
**Jey 416-816-9011**

## BASEMENT FOR RENT
**MCOWAN & BRIMORTON**
Two bedroom basement rent.
One washroom. Sep. entrance, 1 parking. Avail. immediately.
Close to all facilities.
**Contact: 647.717.0850**

## BASEMENT FOR LEASE
**MCCOWAN & 14TH AVENUE**
TWO BEDROOMS +TWO WASHROOMS +ONE PARKING SPOT, SEPARATE ENTRANCE, Ensuite Laundry (Not Shared)
PRICE ;- $1650+33% UTILITIES
MORE INFO CALL: **416.303.0910**

## BASEMENT FOR RENT
**MCLEVIN & SWELLS.**
1 bedroom bsmt for rent.
Sep.entrance, 1 full washroom, laundry, 1 parking.
தொடர்புகளுக்கு:
**416.809.2280**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & FINCH**
2 bedroom basement for rent.
Sep. entrance. 1 parking, laundry.
The buses runs across to the house (939, 953 & 133)
**Contact : (416) 669-9254**

## BASEMENT FOR RENT
**MIDDILFIELD & FINCH**
Basement for rent. Sep. entrance. Men preferred. Close to TTC & all other facilities.
Available January 15, 2022.
**Contact: 647.707.6095**

## BASEMENT FOR LEASE
**WESTNEY & ROSSLAND (AJAX)**
2 bedroom walkout bsmt for lease. washroom, Sep. entrance.
1 parking, sep. laundry.
**Rupan: 647.400.1137**

## BASEMENT FOR RENT
**HARWOOD AVE. & KINGSTON RD**
1 BEDROOM BASEMENT FOR RENT. LAUNDRY INCLUDE. 1 CAR PARKING. No pets. Close to all facilities. Available immediately.
**Contact: 647.390.9112**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom basesment for rent. Sep. entrance, laundry, parking, cable & free Wi-Fi. Close to TTC, catholic & public elementary schools & other all facilities.
No pet, No smoke & No drink.
Available immediately.
**Contact: 647-721-2637**

## BASEMENT FOR RENT
**BRIMORTON & MOUNTLAND**
2 Bedroom basement for rent with sep. entrance. All facilities. including 2 car parking. Female / students or working women preferred
Avail. immediately
**Contact: 416-894-2467**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 16TH AVENUE**
2 Bedroom, 1 Washroom, 1 Car Parking. Sep. entrance. Close to Schools, South Asiyan Supermarket, No Frills. Avail. immediately.
**Contact: 647- 405-1962**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & ELLESMERE**
3 bedroom, 2 full washroom brand new basemet for rent. Rent $2,000 + utilities.
**MARKHAM & SHEPPARD**
3 bedroom+ 2 washroom bsmt for rent. Rent $1,800 + 50% utilities.
No alcohol, No pets, No smoking.
**647.507.2148 / 647.864.1051**

## HOUSE FOR RENT
**BALLAMY/LAWRENCE**
4 Bedrooms, 2Washrooms House for rent Main floor . 3 Car parking.
3 bed, 2washroom bsmt for rent.
2 car parking.
**647.299.2791/ 416.431.9567**

## HOUSE FOR RENT
**KENNEDY & LAWRENCE**
3 bedrooms, 2 full washroom house for rent. 2 parking (1 inside the garage).
sharing laundy.
Utilities 60%. Avail. Immediately.
**Contact: 416.277.9044**

## CONDO FOR RENT
**MIDDLEFIELD & FINCH IN GTA MALL**
2+1 bedroom & 2 washroom with newly renovated in front of GTA Mall Main entrance 1 car parking. Available immediately.
**416-998-4638 or 416-838-6840**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent.
Sep. entrance.No Parking.Couple, Students or single preferred.
No smoke or pets.Close to all facilities.
Avail. December 15, 2021.
**Contact : 905.472.8528**

## BASEMENT FOR RENT
**MIDLAND & EGLINTON**
1 Bedrooms bsmt for rent.
Sep. Entrance.
Close to all Facilities.
Avail. February 01, 2021
**416.554.0759 / 416.220.3003**

## ROOM FOR RENT
**KENNEDY & EGLINTON**
1 Room for rent in a 2 bedroom aprt.1 person $800, 2 person $900. Working Students, 65+seniors preferred. Close to TTC, Kennedy subway. no pets, smoking, drinking. Avail. immediately
**416.857.5252 / 416.752.4444**

## HOUSE FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
3 Bedroom house for rent. 3 washroom, parking, laundry.
Avail. February 01, 2022.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## HOUSE FOR RENT
**BRIMLEY & EGLINTON**
3 Bedroom, 2 washroom house for rent. Parking, Sep. laundry. Close to school, hospital & Shoping Plazas.
Avail. Immediately
**Contact: 647.981.1997**

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent
3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**MARKHAM & ELLESMERE**
3 bedroom Bungalow house for rent.(main floor).
Parking, laundry.
Available immediately.
**Contact: 647.996.6977**

## ROOM FOR RENT
**KENNEDY & EGLINTON**
2 bedroom available 3 people can share the bsmt. Free WIFI available.Indian students & working individuals are preferred. Close to TTC
Avail. immediately
**Contact: 416.230.1636**

## HOUSE FOR LEASE

**GOLF CLUB & ELLESMERE**
Two bedroom house for rent.
One parking
Close to schools Access to 24 hours bus service
**For further information, please call**
**416.569.9080**

## HOUSE FOR RENT

**WESTNEY & HARWOOD - SOUTH AJAX**
3 Bedrooms banglow house for rent.1 Bathrooms. 2 parking, shered laundry. Near hospital, Hwy 401. go staition. Close to all amenities.
Avail. March, 2022.
**647.608.6097/647.916.5990**

## HOUSE FOR RENT/ROOM FOR RENT

**KENNEDY ROAD, SCARBOROUGH - EGLINTON**
THREE BED ROOMS & LIVING ROOM. KITCHEN+DINING+FRIDGE+ ALL FACILITIES. 2 washroom-NEAT & CLEAN. CAR PARKING AVAILABLE.
**ALSO SINGLE SEPERATE ROOM AVAILABLE FOR STUDENT.**
**Please call Tel: 647.719.5853**

## HOUSE / BASEMENT FOR RENT

**NEILSON & HWY 401**
A 4 bedroom luxurious house for rent. It's newly renovated. It is located near a plaza with restaurants and a supermarket within walking distance. It will be available from January 15, 2022.
A 2 bedroom luxurious bsmt (backsplit bsmt) for rent. It's newly renovated apartment with a fireplace, a sauna room and an open concept living room and kitchen.
**For more information, contact me at 416.779.7563**

## BASEMENT FOR RENT

**TAUNTON & WHITES RD. (Pickering)**
From Markham & Steeles to pickering 10 minute.
1& 1/2 large walkout bsmt for rent. Sep. entrance,
1 Parking, sep. laundry. Avail. Immediately.
**Contact: 416.836.0010**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & ELLESMERE:** 3 bedroom, 2 full washroom brand new basemet for rent. Rent $2,000 + utilities.
**MARKHAM & SHEPPARD:** 3 bedroom+ 2 washroom bsmt forrent. Rent $1,800 + 50% utilities. No alcohol, No pets, No smoking.
**DONMILLS & STEELES:** 2 bedroom+ 1 washroom bsmt forrent. sep. laundry. Rent $1,400 + 40% utilities. No alcohol, No pets, No smoking.
**647.507.2148 / 647.864.1051**

## வாடகைக்கு

தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட
**GTA Square Mall(Middlefield & Finch)**
நிலமட்ட வியாபார இடம் **February 01** முதல்வாடகைக்கு வருகிறது. மாத வாடகை **$ 1600.00.**
**Krishna (Shiyara) 647.308.6069**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**VICTORIAPARK & HWY 401 (Scarborough)**இல் அமைந்துள்ள **ENGLISH PUB**க்கு Experienced **LINE COOK & COOK HELP** wanted immediately.
FULL TIME / PART TIME
**Please contact at 416-566-9994.**

## வாடகைக்கு கொடுத்திட, பெற்றிட

Rooms: 5 BR, 4 BR, 3 BR, 2 BR, 1 BR APT, House, Condo, Basement GTA, TORONTO, Scarborough, york, Peel, Durham, Halton ஆகிய பகுதிகளில்
**A1 Canada Rental Services**
**MR Ratha Francis Xavier**
**416.857.5252 / 416.752.4444**

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**NEWMARKET & AURORA**
**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.
**647.308.7221**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு
அழையுங்கள்: **416.880.5952**

## Cleaners/Subcontractors

Cleaners/Subcontractors Needed to clean Privately owned Education Centre Facility
Vaughan/Richmond Hill Area
Weekly Night cleaning
Must Have Car.
Leave msg on Cell: 416 936 1873
Will return call within 24 hours

## CLEANERS WANTED

Woodbridge area.
Daytime and after hours.
**Please contact :**
**416-412-3223**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.
**647.512.9820 / 647.868.2440**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.
**MOVING / DELIVERY AVAILABLE.**
**Contact :** பிறேம்-**647.835.5244**

## பராமரிப்பாளர் தேவை

Need some one ( Female)who can take care of one elderly mother . Accommodations and incentives will be provided on monthly basis.
வயதான பெண்மணி ஒருவரை பராமரிக்க பெண் ஒருவர் தேவை.
வீட்டில் தங்கி இருந்து பார்க்கலாம்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்,
**416. 918.9848 / 416. 454.3138**

## மணமகன் தேவை

இலங்கை இந்திய வம்சாவழியை சேர்ந்த இலங்கையில் ஆசிரியராகப் பணிபுரியும் அழகிய 32 வயதுடைய 5.5 உயரமுடைய மணமகளுக்கு நற்குணமுடைய படித்த மணமகன் தேவை.
**0788630663/ 0763840244**
**Prenavk@gmail.com**

## AZ/DZ DRIVERS WANTED

Experienced drivers wanted immediately
(At least one year) for long & short run with in Canada.
Full time. on call. SPS Transporation Private LTD.
**647.528.2224 / 647.830.4644**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**
**(SCARBOROUGH)**
உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.
Please call or text me : **416.451.0055**
**info@rainbowcharterservice.ca**

Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

# வீடு வாடகைக்கு!! FOR RENT!!

**Available for Rent**

**Vaughan – Rutherford/Bathurst – Townhouse**
(3Brm + 3Bath) **[$3600/m]**

**Markham – Markham/Denison – Semi Detached Bsmt**
(2Brm + 2Bath, Sep.Ent) **[$1700/m]**

**Scaroborugh – Warden/Kingston-Detached**
(2+1 Brm +2Bath) **[$3000/m]**

**Scaroborugh – Morningside/Morningview- Bsmt**
(3Brm +2Bath) **[$1900+Utilities/m]**

**Scaroborugh – Vicotria Park/Hwy401- Detached**
(3Brm +1Bath) **[$2750/m]**

**Scaroborugh – Warden/St.Clair- Semi Detached**
(3Brm +1Bath) **[$2500/m]**

**Brampton – Chinguacousy Rd/Mayfield Rd- Detached House**
(4Brm +3Bath) **[$2900/m]**

**Available for Rent**

**Downtown Condo – Bay St/Adelaide St W– Condo**
(2Brm + 2Bath) **[$1990/m]**

**Pickering – Pickering Parkway/Valley Farm- Townhouse**
(3Brm + 2Bath) **[$2750/m]**

**Oshawa – Adelaide/Waverly- Detached Bsmt**
(3Brm + Bath, Walkout) **[$1800/m]**

**Oshawa – Simcoe/Conlin- Detached**
(4+2Brm + 4Bath) **[$2900/m]**

**Ajax – Rossland/Church St- Semi Detached**
(4Brm + 3Bath) **[$2800/m]**

**Bowmanville/East Shore/Port Darlington- Detached Floor**
(4Brm + 3Bath) **[$3500/m]**

**Beaverton – Simco St/Mara Rd- Detached House**
(4Brm + 4Bath) **[$2690/m]**

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

**We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**



# AUTO & HOME

## INSURANCE COMPANIES

- CAA Insurance
- Royal and Sun Alliance
- Pembridge Insurance
- SGI Canada
- Economical Insurance
- Intact Insurance
- Echelon Insurance
- Aviva Insurance
- Coachman Insurance

## Linghan Thampu

CONTACT

**416-450-5261**

linghan.thampu@brokerunion.ca

www.brokerunion.ca

CAA RSA PEMBRIDGE INSURANCE COMPANY SGI CANADA economical INSURANCE intact INSURANCE echelon Insurance AVIVA Coachman INSURANCE COMPANY

# படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatico.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**- சிவகுமார் -**

எல்லோரும் என்னைக் கேலி செய்கின்றனர் என்று வருத்தப்பட்டு எழுதிய இளைஞர் ஒருவருக்கு, எழுத்தாளர் பாலகுமாரன் அவர்கள் வழங்கிய அறிவுரை......

1. புத்தகங்களைத் துணை கொள்.
2. உடலுழைப்பை அதிகரி.
3. சமூகம் புறக்கணித்தவற்றைக் கைவிடு.
4. குளிர்ந்த நீரில் குளி.
5. கொஞ்சமாய்ச் சாப்பிடு.
6. தியானம் கைக்கொள்.
7. இரவு உறங்கும் முன் நெடுந்தொலைவு நட.
8. உடுப்பில் வெள்ளை நிறத்தைப் பழக்கமாக்கு.
9. உணவில் கீரை சேர்த்துக் கொள்.
10. எத்தனை வலித்தாலும் அழாதே. சிரி.
11. ஆத்திரம் அகற்று.
12. கேலிக்குப் புன்னகை தா.
13. கோபத்திற்கு மௌனத்தைக் கொடு.
14. நட்புக்கு நட்பு செய்.
15. வேலை சொல்லித் தருபவரிடம் மிகப் பணிவாக இரு.
16. அலட்சியப்படுத்தினால் விலகி நில்.



17. அன்பு செய்தால் நன்றி சொல்.
18. இதமாகப் பேசு.

நீ ஜெயிப்பாய்.... இது நிச்சயம்!
வாழ்க்கையில் உன்னத நிலைக்கு வருவாய்.
இது சத்தியம்.

# பொங்கல் வாழ்த்துகள்



மாதவனைக் கும்பிட்ட மார்கழித் திங்கள் - முடிந்து
ஆதவனைக் கும்பிடுவோம் தை முதல் நாளில்
பனி மூட்டம் விலகுதல் போல் பாரினிலே மாந்தர்
பட்ட துன்பம் விலகட்டும் போகி நன்னாளில்.
தீய எண்ணங்களை போகித் தீயிலிட்டுக் கொளுத்தி
தூய எண்ணங்களோடு துவங்கிடுவோம் நாளை.
கதிறுத்த வயலினிலே, களமொன்று ஏற்படுத்தி
கதிரவனுக்குப் பொங்கல் படையல் செய்திடவே
புத்தடுப்பு கொண்டுவைத்து புதுப்பானை அடுப்பிலேற்றி
கொத்து மஞ்சள் அதன் கழுத்தினிலே சுற்றிவைத்து
புத்தாடை தானுடுத்தி, பூசைகள் தான் நடத்தி
இத்தனை நாள் உழவுக்கு, உறுதுணையாய் இருந்திட்ட
கதிரவனுக்கும், காளைகளுக்கும் நன்றி செலுத்தும் நாள்.
உழவர் திருநாள் என்றும், தமிழர் திருநாள் என்றும்
புத்தாண்டு நாள் என்றும், பலவாறு அழைத்திடுவர்
சங்கராந்தியென்பர், பைசாகி என்றிடுவர்
பார் முழுவதும் இருக்கின்ற மக்களெல்லாம்
பல்வேறு பெயர்களில் இந்நாளை அழைத்திடுவர்
அனைவரும் கொண்டாடும் சமத்துவப்பொங்கலன்றோ
பெயரில் என்ன உண்டு, பேரின்பம்தான் வேண்டும்
வயலில் உழைப்பவனின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்
சோறூட்டும் விவசாயியின் சோகம் தீரவேண்டும்
இயற்கையும் அவனுக்கு இன்னல் தராதிருக்கவேண்டும்
அளவோடு மழைபெய்து அறுவடை சிறக்கவேண்டும்
உழவன் வாழ்ந்தால்தான் உலகோர்க்கு வாழ்வு எனும்
உண்மையுணர்ந்து நாம் உழவரைபோற்றிடுவோம்
மங்கட்டும் இந்த மன்பதையில் துன்பங்கள்
பொங்கட்டும் பூவுலகில் பொலிவான இன்பங்கள்

*சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்*

# புறந்த...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

என்று நினைத்தால் அவர்களுடய நல்ல கோணத்தைத் தெரிந்து கொள்ளச் செய்யலாமே. அது பேசப்பட்டவர்களின் நல்ல செயலை மேலும் தூண்டும். தங்களைப் பற்றி இருக்கும் எண்ணப் பாட்டினை (image) பாதுகாத்துக் கொள்ள வேண்டும், தங்களுக்குக் கிடைத்த



அங்கீகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவலை அவர்களுக்குள் எழுப்பும். சொன்னவரைப் பற்றியும் நல்ல அபிப்பிராயத்தைத் தரும். பிறருடனான உறவுகள் வலுப் பெறும்.

நீங்கள் ஒருவரைப் பற்றி என்ன பேசுகிறீர்களோ அது முதலில் நீங்கள் யார் என்பதையே பிரதிபலிக்கும். தவிர அது அவருக்கு என்ன விளைவை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறீர்களோ அந்த விளைவு உங்களிடம் இருந்தே ஆரம்பம் ஆகும். மற்றவர்களை மகிழ்ச்சிப் படுத்துவது அவர்களுக்குத் தரும் மறுமலர்ச்சி அல்ல அது உங் களுக்கே மகிழ்ச்சி தரக் கூடியது. இதைப் புரிந்து கொண்டால் மகிழ்ச்சி மனதில் நிறையும்.




உ

Govt Regd: 571/2007

**திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளை**
**அனைவரும் சாப்பிட வாருங்கள்**
**தினமும் மதியம் இலவச அன்னதானம்**
**தைப்பூசம் திருவிழா அழைப்பிதழ்**

சிதம்பரம் ஸ்ரீநடராஜர் கோவிலுக்கு தரிசனம் செய்யவரும் பக்கதர்களுக்கு திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளையில் தினமும் மதியம் இலவச அன்னதானம். வடைபாயசத்துடன் 1000 நபர்களுக்கு அன்னதானம் வரும் 18.01.2022 செவ்வாய்கிழமை பவுர்ணமி தைபூசத்தை முன்னிட்டு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைவரும்இந்த தர்மத்தில் பங்கு கொண்டு இதன் சிறந்த பலன்களை அடைய பிரார்த்தனை செய்கின்றோம். 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ. 50,000/- ஆகின்றது. இதில் தங்களால் முடிந்த நன்கொடைகளை செலுத்தி இதற்கான முறையான ரசீது பெற்றுக் கொள்ளலாம். இது சமயம் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோவிலில் தங்கள் குடும்ப பெயர் நட்சத்திரங்கள் ராசி சொல்லி சங்கல்பம் செய்து உங்கள் குடும்ப நலமாக இருக்க பிரார்த்தனை செய்து அர்ச்சனை செய்து, அதன் பிரசாதங்கள் விபூதி, குங்குமம், சந்தனம், ஸ்ரீநடராஜர் போட்டோ ரசீது முறையாக அனுப்பி வைக்கின்றோம். கேட்பவர்களுக்கு கேட்ட வரம் தரும் தில்லை ஸ்ரீநடராஜர் இடத்தில் உங்கள் பிரார்த்தனைகளை செலுத்துங்கள். 2022ம் ஆண்டின் இந்த தர்மத்தில் சிறந்த பலன்களை பெற்று வாழ்க வளமுடன், வளர்க நலமுடன் ஆசீர்வாதங்கள்.

1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ 50,000/-
100 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ 5000/
10 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூ 500/
இயன்றதை செய்து இந்த தர்மத்தின் சிறந்த பலன்கள் அடைய வேண்டுகின்றோம்.



இப்படிக்கு
**ப்ரம்மஸ்ரீ.சி. நவதாண்டவ தீக்ஷிதர்**
(Bank: State Bank of India , Chidambaram Branch,
Current A/C No. 30263863248)
IFSC Code: SBIN0000823
22/10, கீழ சன்னதி, சிதம்பரம் - 608001
செல்: 93455 12976, 93645 83178, 7639043896
www.thiruchitrambalam.org
Email: sandhanasubramani1969@yahoo.com
anandhancdm2015@gmail.com




HomeLife/GTA Realty Inc. Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
Experienced and New Sales reps. are welcome to join our successful , energetic and high standard team.
FREE
Real Estate classes start every week.
• Office open 7 days - 24 hours access
• Over 5,000 Sqft. office
• Conveniently Located in GTA Square Mall
To Join our successful & energetic Team
Please Call : 416.321.6969
5215 Finch Ave. East Unit 203 Toronto ON. M1C 0C2
Eddie Woo
Broker of Record/Owner
Raja Mahendran
Broker/ Owner
*Independently Owned & Operated


வடகாடு,சீரடி பாபா இல்லம், தியான பயிற்சி நிலையம்
BABA'S MESSAGE TILL TODAY.
"After I take Samadhi, my bones will speak from the grave, and people will throng here."
His message is being experienced till today.
மாங்குளம் சந்தியில் இருந்து துணுக்காய் போகும் வீதியில் வடகாடு என்னும் கிராமத்தின் ஆரம்பத்தில் 95 Km ல் பிரதான வீதியிலேயே பாபா இல்லமும் தியான மண்டபமும் அமைந்துள்ளன.
Kugan (Sinnamani) : Tel :+94 75 574 4167 / +94 77 000 9423
Vany Jaganmohan : Tel :+94 76 030 4167 (WhatsApp)
Email : shirdibabaillam@yahoo.com
Web : www.shirdibabaillam.com
நம்பிக்கை பொறுமை

# தமிழ்நாட்டில் தள்ளாடும் மதுவிலக்கு!


## நூல் விமர்சனம்: தளவாய் சுந்தரம்

தமிழ்நாட்டில் கொரோனா பரவல் காரணமாக மீண்டும் ஊரடங்கு கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பள்ளி, கல்லூரிகள், பூங்காக்கள், வழிபாட்டுத் தலங்கள் மூடப்பட்டுள்ளன. நிறுவனங்கள், தொழிற்சாலைகள் 50சதவீதம் ஊழியர்களுடனேயே இயங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இத்தனை கட்டுப்பாடுகளுக்கும் மத்தியில் அரசு மதுபானக் கடைகள் ('டாஸ்மாக்') தடையின்றி இயங்குகிறது. இதனை எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன. இது போல் கடந்த அ.தி.மு.க ஆட்சியில் கொரோனா பொது முடக்கத்தின்போது மதுபானக் கடைகளைத் திறந்ததை எதிர்த்துப் போராடிய தி.மு.க தான் தற்போது ஆட்சியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று நேற்றல்ல, கடந்த நூறு ஆண்டுகளாகவே தமிழ்நாட்டு அரசியலில் மதுவிலக்கு கோரிக்கை இப்படித்தான் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. மதுவிலக்குக்காக 1980ஆம் ஆண்டு தொடங்கிப் போராடி வரும் பா.ம.கவும், கடந்த பதினைந்து ஆண்டுகளாக போராடிவரும் ம.தி.முகவும் மட்டுமல்லாது, கடந்த ஐம்பது ஆண்டுகளாக மாறிமாறித் தமிழ்நாட்டை ஆட்சி செய்துவரும் தி.மு.கவும் அ.தி.மு.கவும் கூட மதுவிலக்கை அமல் படுத்துவோம் என்று பேசி வருகின்றன.

தமிழ்நாட்டின் இந்த மதுவிலக்கு அரசியலை, அதன் சமூக வரலாற்றுப் பின்னணியோடு விவரிக்கும் நூல், ஆர். முத்துக்குமார் எழுதியுள்ள 'மதுவிலக்கு - அரசியலும் வரலாறும்'. 1920 முதலே தேர்தல் அரசியலை மையப்படுத்தியே தமிழ்நாட்டில் மதுவிலக்கு கோரிக்கை முன்வைக்கப்படுகிறது என்கிற அதிர்ச்சியூட்டும் வரலாற்றுச் செய்தியுடன் தொடங்குகிறது இந்த நூல்.

தமிழ்நாட்டில் கடந்த 100 ஆண்டுகளாக விவாதத்தில் இருக்கும் விவகாரம் மதுவிலக்கு. இந்த நீண்ட நெடிய காலகட்டத்தில் மதுவிலக்கு விவகாரத்தைச் சுற்றி இயங்கிய அரசியல், வரலாறு உட்பட அனைத்துப் பரிமாணங்களையும் விரிவாக விவாதிக்கிறது இந்த நூல். 'இந்திய தேர்தல் வரலாறு', 'தமிழ்நாட்டு அரசியல் வரலாறு', 'திராவிட இயக்க வரலாறு' ஆகிய பரவலான கவனத்தைப் பெற்ற அரசியல் புத்தகங்களை எழுதியுள்ள ஆர். முத்துக்குமார் இந்நூலை எழுதியுள்ளார். இந்நூலில் இவர் மேற்கொண்டுள்ள தேடல் பயணம், இந்திய சுதந்திரப் போராட்ட காலகட்டம் வரைக்கும் செல்கிறது. இதன்மூலம் அதிகம் பேசப்படாத பல அரசியல் தகவல்களை இந்த நூலில் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார். 1921இல் சென்னை மாகாணத்




தேர்தலில் நீதிக்கட்சி வெற்றிபெற்ற செய்தியிலிருந்து, இன்றைய தேர்தல் களநிலவரம் வரைக்கும், மதுவிலக்கு கோரிக்கை துணைகொண்டு தேர்தல் நிலவரங்களையும் சேர்த்து அலசுகிறார், ஆர். முத்துக்குமார்.

காந்தியின் நிர்மாணத் திட்டம், காந்தி - இர்வின் ஒப்பந்தம், பிராமணர் - பிராமணர் அல்லாதார் போராட்டம், ராஜாஜியின் முயற்சிகள், காங்கிரஸ் நடத்திய களப் போராட்டங்கள், ஒன்றியத்தில் ஆட்சியாளர்களாக இருந்த இந்திரா காந்திக்கும் மொரார்ஜி தேசாய்க்கும் இடையேயான முரண்பாடுகள், ஒன்றிய அரசின் ஆய்வுக் குழுக்கள் உட்படப் பல நுட்பமான மதுவிலக்கு தொடர்பான தகவல்களையும் இந்நூலில் தேடித் தொகுத்துத் தந்துள்ளார்.

காந்தி - ராஜாஜி காலம், ஓமந்தூரார் - அண்ணா காலம், கருணாநிதி காலம், எம்.ஜி.ஆர். காலம், கருணாநிதி - ஜெயலலிதா காலம், போராட்ட காலம் என ஆறு பகுதிகளாக பிரித்து, மதுவிலக்கு அரசியலை காலவரிசைப்படி விவரிக்கிறது இந்த நூல். சுதந்திர போராட்ட காலத்தில் காந்தியின் நிர்மாணத் திட்டங்களில் ஒன்றாக மதுவிலக்கு இருந்தபோது அந்த விவகாரத்தை ராஜாஜி கையிலெடுத்ததன் பின்னணியைக் காந்தி - ராஜாஜி காலம் விவரிக்கிறது. சென்னை மாகாணத்தில் மது விலக்கு அமலுக்கு வந்தது, அதை கடைப்பிடிப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் உட்படப் பல பிரச்சினைகள் இப்பகுதியில் அக்காலகட்ட செய்தித்தாள் ஆதாரங்களுடன் காட்டப்பட்டுள்ளது. பார்ப்பனரல்லாதோர் மத்தியில் நீதிக்கட்சிக்கு இருக்கும் செல்வாக்கைக் குறைப்பதற்கு ராஜாஜி கையில் எடுத்த கேடயமே மதுவிலக்கு என்பதை, காந்தி - ராஜாஜியின் பேரனான ராஜ் மோகன் காந்தியின் பதிவிலிருந்து எடுத்துக்காட்டியிருப்பது சிறப்பு. ராஜாஜி காலம் முதல் அண்ணா ஆட்சிக் காலம் வரை தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலிலிருந்த காலகட்டத்தில் கள்ளச் சாராயமும் புழக்கத்தில் இருந்தையும் சுட்டிக் காட்டுவது மற்றொரு சிறப்பு.

ராஜாஜிக்குப் பிறகு டி. பிரகாசம் தொடங்கி அண்ணா வரை இருந்த பல்வேறு முதலமைச்சர்களின் காலத்தில் மதுவிலக்கு கடைப்பிடிக்கப்பட்ட விதத்தை ஓமந்தூரார் - அண்ணா காலம் பகுதி விவரிக்கிறது. சேலம் உட்பட நான்கு மாவட்டங்களில் ராஜாஜி கொண்டு வந்த மதுவிலக்கைச் சென்னை மாகாணம் முழுவதிலும் கொண்டு வந்ததோடு, அதனால் எழுகின்ற வருவாய் இழப்பை ஈடுசெய்யும் நடவடிக்கை என்றுகூறி, பள்ளிக்கூடங்களை மூடாமல், சமூக நீதியையும் பாதுகாத்திட்ட ஓமந்தூராரின் சமூகத் தொண்டையும் அழுத்தமாகப் பதிவு செய்கிறது இப்பகுதி.

அடுத்தது கருணாநிதி காலம் தமிழ்நாட்டு மதுவிலக்கு வரலாற்றில் திருப்புமுனை காலகட்டம். 1971ஆம் ஆண்டு ஏன் கருணாநிதி மதுவிலக்கை ரத்து செய்தார் என்பதை அலசும் இப்பாகம், அதற்கு ராஜாஜி, காயிதே மில்லத் காட்டிய எதிர்ப்புகளையும் விவரிக்கிறது. 1971இல் மதுவிலக்கைக் கருணாநிதி தளர்த்திய போது, அதற்கு வாழ்த்து சொன்ன ஒரே கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்பதும், "திமுகவைச் சேர்ந்தவர்களோ என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ சாராய உற்பத்தி தொழிலில் ஈடுபட

தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)
















LAND FOR SALE
9th Line and Main St. Stouffville
Site plan approved for 12 townhouses
Asking $5.2M
Contact: Gulshan Sharma Broker
416.321.6969
HOMELIFE GTA REALTY INC. Brokerage
5215 Finch Ave E., #203, Toronto ON. M1S 0C2




# தமிழ்நாட்டில்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

மாட்டார்” என அன்று கருணாநிதி கொடுத்த வாக்குறுதியும் இன்றைய தலைமுறை அறியாதது. (ஆனால், கருணாநிதி உயிருடன் இருந்தபோதே தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் மதுபான ஆலைகள் நடத்துகின்றனர் என்ற விமர்சனம் எழுந்துவிட்டது குறிப்பிடத்தக்கது) தேர்தல் வரும்போதெல்லாம் அரசியல் கட்சிகள் மதுவிலக்கை அமல்படுத்துவோம், தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்போம் என்ற கவர்ச்சிகரமான கோஷத்துடன் களமிறங்குவதும், ஆட்சிக்கு வந்த பிறகு கொடுத்த வாக்



குறுதியைச் சுலபமாக மறந்துவிடுவதுமாகத்தான் தமிழ்நாட்டு அரசியல் வரலாறு இருந்து வருகிறது. கருணாநிதிக்குப் பிறகு வந்த எம்.ஜி.ஆர். மது விலக்கை தளர்த்தியதுடன் ‘டாஸ்மாக்’ என்ற நிறுவனத்தையும் உருவாக்கினார். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு வந்த கருணாநிதி ஆட்சியில் மலிவு விலை மது அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து வந்த ஜெயலலிதா ஆட்சியில் மலிவு விலை மது ஒழிக்கப்பட்டது் ஆனால், சில்லறை மதுபான விற்பனையில் அரசு நிறுவனமான ‘டாஸ்மாக்’ ஈடுபடுத்தப்பட்டது.

கடைசிப் பகுதியான ‘போராட்ட காலம்’ விவரிப்பது சமீப ஆண்டு நிகழ்வுகள். 1980கள் தொடங்கி நடைபெற்று வரும் மதுவுக்கு எதிரான போராட்டங்கள், மதுரை சசிபெருமாளின் மரணம், அது தமிழ்நாட்டில் ஏற்படுத்திய தாக்கம் போன்றவற்றைப் பற்றிப் பேசுகிறது இப்பகுதி.

தமிழ்நாட்டின் மது விலக்கு விவாகரத்துக்குள் மறைந்திருக்கும் அரசியல் என்ன? உண்மையிலேயே மது விலக்கைக் கொண்டுவர முடியாதா? அதற்குள் மறைந்திருக்கும் சிடுக்குகளையும் சிக்கல்களையும் அவிழ்ப்பது எப்படி? தமிழ்நாட்டில் மது விலக்கு அமலுக்கு வந்தால் யாருக்கு லாபம்? யாருக்கு இழப்பு? போன்ற அத்தனை கேள்விகளுக்குமான பதில் இந்த நூலில் இருக்கிறது.

